மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 15 வெள்ளிக்கிழமை (31.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 224

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908
dish tv
1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo, Cartoon network BBC,CNN

சரணடைந்த விடுதலைப் புலிகளை பொதுவாழ்வில் இணைக்கத் திட்டம்

அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசிடம் சரணடைந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகளை தேசிய நீரோட்டத்தினூடாக பொதுவாழ்வில் இணைத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கான ஆரம்பக்கட்டப் பணிகள் தொடங்கியுள்ளதாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பான திட்டங்களை ஆராயும் பொருட்டு நேற்று கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.குடாநாட்டுப் பிரச்சினை தொடர்பில் கட்டளைத் தளபதியுடன் அமைச்சர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் முகம் கொடுத்துவருகின்ற பாதுகாப்புத் தரப்பிலான சிரமங்கள், தடைகள், சோதனைச் சாவடிகள், பாதுகாப்பு வலயங்கள், மீள்குடியேற்றங்கள், தொழில்சார்ந்த தடைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.பி.ஆர்.த.சில்வாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தையொன்று நேற்று காலை இடம்பெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.பணிமனையில் இடம்பெற்ற இப் பேச்சுவார்த்தையின்போது முக்கியமான 19 விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

பாதுகாப்பு வலயங்களில் உள்ள கோவில்களுக்கு செல்வதற்கான அனுமதி, இடம் பெயர்ந்த நிலையில் வந்துள்ள மக்களது படகு என்ஜின்கள் தொடர்பான விடயம், தென்மராட்சி தென்பகுதியில் தொழில் புரிவதற்கும் மீளக் குடியமர்த்துவதற்குமான அனுமதி வரணி பொதுச் சந்தையைத் திறத்தல், குருநகர் ஐந்து மாடி வீட்டுத்

(14ஆம் பக்கம் பார்க்க)

போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது வன்னியில் நின்ற 'றோ' அதிகாரிகள்

ஜே.வி.பி. திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் வன்னியில் உச்சக்கட்டமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் இந்தியப் புலனாய்வு நிறுவனமான றோ அமைப்பின் முகவர்கள் ஐம்பது பேர் அரசுக்குத் தெரியாமல் வன்னியில் இருந்ததாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

இருந்தபோதிலும் போர் முடிபுக்கு வரும் நிலையில் குறிப்பிட்ட றோ முகவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றை அரசிடம் வழங்கிய இந்திய அதிகாரிகள், அவர்களின் பாதுகாப்பையிட்டு கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொண்டதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்திருக்கும் பேட்டியில் சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

இவர்கள் ஏன் வந்தார்கள்? இவை எல்லாம் இரகசியமானவை

(14ஆம் பக்கம் பார்க்க)

கணனி மயப்படுத்தப்பட்ட விசேட அடையாள அட்டை

(கொழும்பு)

இடம் பெயர்ந்தவர்களில் அடுத்தமாதம் 7ஆம் திகதி மீளக்குடியேற்ற உள்ள அனைவரினதும் படங்கள் கணனிமயப்படுத்தப்பட்டு அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அன்றைய தினத்தில் குடியமர்த்தப்பட உள்ள 35 கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படும். எதிர்காலத்தில் இந்த அடையாள அட்டைகள் இல்லாத எவரும், குறித்த கிராமங்களில் உள்ள வீடுகளில் இருக்க முடியாது என பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

வெளியார்

(14ஆம் பக்கம் பார்க்க)

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம்

கல்வி அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய ரீதியான பாடசாலை மட்ட விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் 10.06.2009இல் வழங்கப்பட்ட கடிதத்தில் அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் 2009 செப்ரெம்பர் மாதம் 5,6 மற்றும் 7ஆம் திகதிகளில் நடைபெறுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் கல்வியமைச்சின் 29.07.2009 ஆம் திகதிய புதிய சுற்று நிருபத்தின்படி தேசிய மட்ட,பாடசாலை

(14ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு அரிசி!

வவு.அரச அதிபர் நடவடிக்கை

(வவுனியா)

யாழ்ப்பாணத்தில் அரிசி விலையை மேலும் குறைக்கும் நோக்கில் வவுனியா, மன்னார் மாவட்டங்களில் உற்பத்தியாகும் அரிசியை வவுனியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளார்.

இந்த இரண்டு மாவட்டங்களிலும் உற்பத்தியாகும் அரிசி கொழும்புக்குக் கொண்டு வரப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இதனைத் தவிர்த்து வவுனியாவில் ஓர் இடத்திலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தால் யாழில் குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக்

(14ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

க.பொ.த. உயர்தரப் பரீட்சை
கணக்கீடு-02

நாளை

க.பொ.த. உயர்தர
மாணவர்களுக்கான
"பங்குச் சந்தை ஓர் அறிமுகம்"
(புதிய விடயங்களை உள்ளடக்கியது)

கோண்டாவிலில் ஆலயத்துடன் மோதி விபத்துக்குள்ளான மினிவானின் தோற்றத்தையே படங்களில் காண்கிறீர்கள்.

(விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

சட்டவிரோதமான விண்ணப்பம் யாழில் மக்கள் மத்தியில் விற்பனை

எச்சரிக்கிறார் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

தடுப்பு முகாம்களில் உள்ள உறவினர்களை விடுவிப்பதற்கான விண்ணப்பம் என்ற பெயரில் விண்ணப்பமொன்று நூறு ரூபாய் விலையில் யாழ் குடாநாட்டில் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பல்வேறு முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளதாக அமைச்சரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ் விடயம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளதாவது,

இடம் பெயர்ந்த நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் தற்காலிகமாக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனரே அன்றி அம் மக்கள் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்படவில்லை. எனவே தடுப்பு முகாம்களில் அம் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறி பொது மக்களை ஏமாற்றி சட்டத்திற்கு புறம்பான முறையில் ஒரு சாரார் பொது மக்களிடம் பணம் பறிக்கும் செயல்களில் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ் விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன். இவ்வாறான நபர்களிடம் அகப்பட்டு பொதுமக்கள் தங்களது பணத்தையும் நேரத்தையும் வீணாகச் செலவிடக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் தொடர்ந்து மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளின் பயனாக யாழ் மாவட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தற்போது கட்டம் கட்டமாக தங்களது சொந்த இருப்பிடங்களுக்கு அனுப்பப்பட்டு வரும் நிலையில், இவ்வாறான சட்டவிரோதமான விண்ணப்பங்களை விநியோகிப்போர் மீது தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

நகைத் தொழிலாளர் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நகைத் தொழிலாளர்கள் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா முன்னிலையில் யாழ் நகைத் தொழிலாளர்களது நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் நகைத் தொழிலாளர்கள் முகம் கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகள் மற்றும் தடைகள் என்பவற்றை நீக்கி இத் தொழிலாளர்களது மேம்பாடு கருதிய முக்கிய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு வசதியாகவே மேற்படி நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இக் குழுவின் தலைவராக செல்லத்துரை திருமூர்த்தி, செயலாளராக தர்மராசா ரவீந்திரன், பொருளாளராக திருநாவுக்கரசு முரளிதரன், உப தலைவ ராக கந்தசாமி சிவகுமார், உப செயலாளராக காண்டீபன், உப பொருளாளராக சிவானாச்சாரியார், போஷகராக கே.புவனேந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ச-5,7)

வர்த்தக நிலையங்கள் ஞாயிறு தினங்களில் பூட்டு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வர்த்தக சங்க எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்கள் யாவும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வியாபார நடவடிக்கைக்காக மூடப்பட வேண்டுமென பருத்தித்துறை வர்த்தக சங்கத் தலைவர் சி.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கூடிய செயற்குழு இதனை ஏக மனதாக தீர்மானித்துள்ளதாகவும் எனவே வர்த்தகர்கள்அனைவரும் இது விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

(ச)

மின்சாரம் நாளை தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலை காரணமாக நாளை சனிக்கிழமை காலை 8.30 - 4.00 மணி வரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சி, இளவாலை, தொல்புரம், மாதகல், வடலியடைப்பு, விளான், இடும்பன் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபை பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(ஓ)

முகமூடி அணிந்த கும்பலினால் மோட்டார் சைக்கிள்கள் அபகரிப்பு

நவாலி வெளியில் இரவுவேளை சம்பவம்

(வட்டுக்கோட்டை)

நவாலி வழுக்கையாற்று இந்து மயானத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் முகமூடி அணிந்த கொள்ளையர்களினால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் அபகரித்து செல்லப்பட்டுள்ளன.

சனநடமாட்டம் குறைவாக இருந்த வேளை இடம் பெற்ற இச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் வட்டுக்கோட்டையிலிருந்து மானிப்பாய் நோக்கி தனது பிள்ளையுடன் சென்று கொண்டிருந்த குடும்பஸ்தரை வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு முன்பாக நின்ற முகமூடி அணிந்த சுமார் 6 பேர் அடங்கிய கும்பலொன்று வழிமறித்துள்ளது. வழிமறித்த அக்குழு மோட்டார் சைக்கிளை தருமாறு வற்புறுத்தியுள்ளது. அதேநேரம் அவ்வழியால் சென்ற இளைஞர் ஒருவரும் அக் கும்பலிடம் மாட்டிக் கொண்டார்.

இருவரையும் வாள்கள், பொல்லுகள் மற்றும் கைத்துப்பாக்கிகளைக் காட்டி அக் கும்பல் அச்சுறுத்திய போதும் அவர்கள் மோட்டார் சைக்கிளை கொடுக்க மறுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த அக் குழு அவர்களை மயானத்துக்கு அழைத்து சென்று தாக்கியதுடன் வாளால் வெட்டவும் முற்பட்டுள்ளது.

இந் நிலையில் பயம் கொண்ட இருவரும் மோட்டார் சைக்கிளை எடுத்துச் செல்ல அனுமதித்துள்ளனர். தாம் வந்த மூன்று சைக்கிளையும் கைவிட்டுவிட்டு அக்கும்பல் மோட்டார் சைக்கிள்களில் நவாலிநோக்கி தப்பிச் சென்றுள்ளது.

ரி வி எஸ் மற்றும் கீரோ கொண்டா ஆகிய இரு மோட்டார் சைக்கிள்களுமே அவர்களினால் அபகரித்து செல்லப்பட்டுள்ளது. இது குறித்து உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்கு முறையிட்டதையடுத்து பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இச் சம்பவம் தொடர்பில் நேற்றுக்காலை வரை நால்வர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து இராணுவத்தினரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(எ-27)

பயணிகளுடன் சென்ற மினிவான் ஆலயத்துடன் மோதி விபத்து

கோண்டாவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ் நகர் நோக்கி வந்து கொண்டிருந்த மினி வான் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஆலயத்துடன் மோதியதில் ஆலயத்தின் முகப்புப் பகுதி பலத்த சேதமடைந்துள்ளது.

நேற்றுக்காலை 10 மணியளவில் கோண்டாவில் உப்புமடம் சந்தியில் இடம்பெற்ற இவ்விபத்தில் அவ் வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆல யமே சேதமடைந்துள்ளது. சம்பவம் தொடர்பாக நேரில் கண்டவர்களின் தகவல் மூலம் தெரியவருவதாவது,

சுன்னாகத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ் நோக்கி மினி வான் ஒன்று மிக வேகமாக வந்து கொண்டிருந்தது. அவ்வேளை ஹன்ரர் வாகனம்ஒன்று அவ்விடத்தினூடாக சென்று கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிவான் பிள்ளையார் ஆலய முகப்பு பகுதியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் ஆலய முகப்பு பகுதி பலத்த சேதமடைந்ததுடன் வானின் முன் பகுதியும் சேதமடைந்தது. சம்பவ நேரம் ஆலயத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பக்தர் ஒருவரின் 49 சி.சி ரக மோட்டார் சைக்கிள் ஒன்று முற்றாக சேதமடைந்திருந்தது. விபத்தின் போது சாரதிக்கு சிறிய காயம் ஏற்பட்டுள்ளது. (ச-7)

மரண அறிவித்தல்

சிற்றம்பலம் விமலராஜா

(விமலன் ஆசிரியர்)

(நெல்லியடி மற்ஸ் சென்ரர் நிர்வாகி)

கரவெட்டி சித்திராங்கர் வளவைப் பிறப்பிடமாகவும் செட்டித்தறை வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் விமலராஜா அவர்கள் 28.07.2009 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. திருமதி சிற்றம்பலம் தம்பதிகளின் புத்திரனும் புஷ்பராணியின் அன்புக் கணவரும் பிரசன்னாவின் (நெ.ம.ம. வித்தியாலயம், 2009 கணிதப் பிரிவு) பாசமிகு தந்தையுமாவார்.

அன்னார் சிவநேசராசா (கனடா), பிரேமாதேவி அருளானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரரும், நாகேந்திரராசா (கொழும்பு), இராசேந்திரம் (கொழும்பு), தெய்வேந்திரம் (கனடா), இந்திராணி குலராஜேந்திரம் (கனடா), செல்வராணி ஜெயானந்தராஜா(கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.07.2009) பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றுப்பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
புஷ்பராணி விமலராஜா (மனைவி)
வி.பிரசன்னா (மகன்)

(C-2949)

சம்பத் வங்கியினால் தெரிவு செய்யப்பட்ட 27 பேருக்கான இறுதி நேர்முகத் தேர்வு கொழும்பில்!

சம்பத் வங்கியினால் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்ட 27 பேருக்கான இறுதி நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு இல.110, சென்ஜேம்ஸ்பீரிஸ் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரியில் 5வது மாடியில் அமைந்துள்ள மனித வளங்கள் திணைக்களத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடு அரசாங்க அதிபரினால் மேற் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் பயண ஒழுங்குகளை அவர்களே மேற்கொள்ள வேண்டும் என அரச அதிபர் க. கணேஷ் அறிவித்துள்ளார். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின்விபரம் வருமாறு,

எம். சாய்நிருபன் (தாவடி வடக்கு), எஸ்.ஆர். சுகந்தன் (கோவில் வீதி), எவ். எக்ஸ். பிரதீப் (கொழும்புத்துறை), ஜீ. பார்த்தீபன் (இராசாவின் தோட்டம்), செல்வி எஸ்.ராஜகுலவீரசிங்கம் திருநெல்வேலிவடக்கு), எஸ்ஜனனி(வண்ணார்பண்ணை), செல்வி ஏ.இராஜதுரை (சாவகச்சேரி), செல்வி என்.பாலகிருஷ்ணன் (அரியாலை), செல்வி கே.கணபதிப்பிள்ளை(மீசாலை), செல்வி என்.தெய்வேந்திரன் (யாழ்ப்பாணம்),

செல்வி ரி.சின்னத்துரை (அளவெட்டி மத்தி), செல்வி சி.குலேந்திரராஜ் (சுன்னாகம்), செல்வி ஏ.கார்த்திகா (யாழ்ப்பாணம்), செல்வி எஸ். ஏகாம்பரம் (கந்தர்மடம்), செல்வி எஸ்.விஜயசிறி (வட்டுக்கோட்டை), செல்வி எஸ்.தயாராணி (அச்சுவேலி), செல்வி எஸ். வக்சலா (நீர்வேலி), செல்வி ரி.கந்தசாமி (நல்லூர்), கே. உமாபிரியன் (கொக்குவில்), ஜே.எம். ஹமில்ரன் (பாண்டியன்தாழ்வு), செல்வி ஏ.எஸ்.ரி.ஜோசப் (யாழ்ப்பாணம்), செல்வி ஆர்.ரமணதாசன் (கந்தர்மடம்), செல்விஎஸ்.லோகவதனி (திருநெல்வேலிகிழக்கு), செல்வி ஆர்.ஸ்ரீகாந்தன் (சண்டிலிப்பாய்), செல்வி எல்.பரிபூரணநந்தன் (சுழிபுரம்), செல்வி கே.பொன்னுத்துரை (ஆனைக்கோட்டை), செல்வி சிவமங்கை (நல்லூர்) (ச-3)

சலரோகச் சிகிச்சை நிலைய திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் அமரர் திருமதி செ. வள்ளிப்பிள்ளை ஞாபகார்த்தமாக நடத்தும் சலரோக சிகிச்சை நிலைய திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி தென்மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் லயன்ஸ் கழக தலைவர் லயன் ப. செல்லத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உப ஆளுநர் லயன் எஸ். ஜெயவத்சலனும் சிறப்பு விருந்தினராக ஆளுநர் சபை உப பொருளாளர் லயன் எஸ். சுந்தரேஸ்வரன், தென்மேற்கு ப.நோ.கூ சங்கத் தலைவர் நா. திருச்செந்திநாதனும், கௌரவ விருந்தினர்களாக க.புஸ்பராசா, திருமதி மாலா புஸ்பராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-14)

தோட்டக்காணி விற்பனைக்குண்டு

அளவெட்டி டச்சு ரோட்டில் 8-ப்பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: - 0757259330

(3047)

இன்று ஒரு தகவல்

புதையலைப் புரிந்து கொள்

ஓர் இளைஞன் வீதியோரமாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான். அந்தப் பக்கமாக பிச்சைக்காரன் ஒருவன் வந்தான்.

“ஏன் அழுதுகொண்டு உட்கார்ந்திருக்கிறாய்?” என்று கேட்டான்.

“என்னிடம் ஒன்றும் இல்லை. இந்த உலகத்தில் நான் இருந்து என்ன பிரயோசனம்? அதுதான் அழுகிறேன்” என்றான் அவன்.

“உன்னிடம் மறைந்திருக்கும் புதையல் என் கண்ணுக்குத் தெரிகிறது. அதை விற்பதற்கு நீ தயாரா?” என்று கேட்டான் இவன். இளைஞனுக்கு ஆச்சரியம்!

“என்னிடம் காசு கூட இல்லையே... அப்படியிருக்கும் போது புதையல் எங்கிருந்து வந்தது?” என்றான்.

பிச்சைக்காரன் சிரித்தான்.

“இப்படித்தான் எல்லோரும் சொல்கிறார்கள். நீ என்னோடு வா. அரசனிடம் போவோம். உன்னிடம் உள்ள புதையலை அவர் நல்ல விலைக்கு எடுப்பார்” என்றான்.

“அது எப்படி உனக்குத் தெரியும்?” என்றான்.

“இதற்கு முன்னரும் பலரை நான் அரசனிடம் அழைத்துக் கொண்டு போயிருக்கிறேன். அதனால் தான் உன்னையும் கூப்பிடுகிறேன்” என்றான்.

இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. “நம்மிடம் என்ன இருக்கிறது? இவனே பிச்சையெடுத்து சாப்பிடுகிறான். இவன் நம்மை ராஜாவிடம் அழைத்துப் போகிறேன் என்கிறான்” என்று யோசித்தான்.

“என்ன யோசிக்கிறாய்? உனக்குப் பணம் வேண்டுமானால் என்னிடம் வா” என்றான் அவன்.

சரி... இங்கே உட்கார்ந்திருப்பதைவிட அங்கேயாவது போய்ப் பார்ப்போம் என்று புறப்பட்டான்.

அவ் இளைஞனும் பிச்சைக்காரனும் அரண்மனையை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

வழியில் அந்தப் பிச்சைக்காரன் சொன்னான்.

“இதோ பார்... முதலே நாம் சில விடயங்களை பேசிக் கொள்ள வேண்டியிருக்கிறது. சரியாக தெளிவாக முடிவெடுத்துக் கொண்டு அதன் பின்னர் ராஜாவிடம் போக வேண்டும்.

ஏனென்றால் அங்கே போய் அதுமுடியாது... இது முடியாது என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கக் கூடாது.

ராஜாவுக்கு விலையைப் பற்றிக் கவலையில்லை. எவ்வளவு சொன்னாலும் நமக்குப் பணம் கிடைக்கும். ஆனால் அதன் பின்னர் நான் இதை விற்பதற்குத் தயாராக இல்லை என்று சொல்லக்கூடாது.

அதனால் புதையலை விற்பதா இல்லையா என்பதை இங்கேயே தெளிவாக முடிவு செய்ய வேண்டும்” என்றான்.

இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்னிடமா... புதையலா? என்று குழம்பினான்.

இப்பொழுது அந்தப் பிச்சைக்காரன் சொன்னான்.

“ஆமாம். இப்பொழுது உதாரணத்துக்கு உன்னுடைய கண்களை எடுத்துக் கொள். அதற்கு நீ என்ன விலை கேட்பாய்?

நான் அதற்கு அரசனிடமிருந்து 50 ஆயிரம் ரூபாய் வாங்கித் தரமுடியும்.

இதயத்தைக் கொடுக்கிறாயா... 20 இலட்சம் வாங்கித் தருகிறேன்.

மூளையைக் கொடுக்கிறாயா... 30 இலட்சம் வாங்கித் தருகிறேன் என்றான். இளைஞனுக்கு கோபம் வந்துவிட்டது.

“என்ன உளறுகிறாய்? உனக்கென்ன பைத்தியமா? கண்ணையும் - இதயத்தையும் மூளையுமா விற்பார்கள்?

என்ன விலை கொடுத்தாலும் அவற்றையெல்லாம் நான் விற்கமாட்டேன் நான் மட்டுமல்ல... யாருமே விற்கமாட்டார்கள்” என்றான்.

இப்பொழுது அந்தப் பிச்சைக்காரன் வாய்விட்டுச் சிரித்தான்.

இப்பொழுது பைத்தியமானது நானா? நீயா? இலட்சக் கணக்கான... கோடிக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள பொருட்களை உன்னிடம் வைத்துக் கொண்டு விற்கமுடியாதென்று சொல்லும் நீ, நான் ஏழை... என்னிடம் ஒன்றுமே இல்லை என்று மரத்தடியில் உட்கார்ந்து கொண்டு அழுது கொண்டிருக்கிறாயே” என்றான்.

இன்றைக்குப் பலர் புதைந்திருக்கும் ஆற்றலைப் புரிந்து கொள்ள முடியாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

புதையலை நாம் தான் தோண்டி எடுக்க வேண்டும். இதைப் புரிய வைப்பதற்காக ஒரு பெரியவர் சொன்ன கதை இது.

நம்மவர்கள் எல்லாம் புதையலை உள்ளே தேடுவதில்லை. வெளியே எங்கேயாவது கிடைக்குமா என்று தான் தேடுவது வழக்கம். ரயில் நிலையத்துக்கு அருகில் ஒரு டாக்சி நின்று கொண்டிருந்தது.

அந்தப் பக்கமாக வந்த ஒருவர் டாக்சி டிரைவரைப் பார்த்து “ஐயா... உங்கள் வண்டியில் பின் சீற்றில் ஒரு மணிப்பேர்ஸ் கிடக்கிறது. யாரோ மறந்து விட்டு விட்டு போயிருக்கிறார்கள் என்றார்.

“இல்லை ... இல்லை அது காலி பேர்ஸ். நான் தான் அதை அங்கே போட்டு வைத்திருக்கிறேன் என்றார் டிரைவர்.

“ஏன் என்று கேட்டார் இவர்”

அதைப் பார்க்கும் யாராவது... அதை எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து சவாரிக்கு வருவார்கள். அதற்காகத்தான் அது என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

க.பொ.த.(உ/த) பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பு

அடுத்த மாதம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தற்போது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்தார்.

அனுமதிப்பத்திரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமாயின் அதுகுறித்து ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட பிரதேசத்திற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளருக்கு தெரிவிக்குமாறு அவர் அதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ் வருடத்திற்கான கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதேவேளை அடுத்தமாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களையும் விரைவில் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

வவுனியா, மன்னார் மாவட்டங்களிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடியாக அரிசி

யாழ்ப்பாணத்தில்அரிசிவிலையை மேலும் குறைக்கும் நோக்கில் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் உற்பத்தியாகும் அரிசியை வவுனியாவிலிருந்து நேரடியாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பீ. எஸ்.எம். சார்ள்ஸ் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இந்த 2 மாவட்டங்களிலும் உற்பத்தியாகும் அரிசி கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட பின்னரே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

இதனைத் தவிர்த்து வவுனியாவில் ஓர் இடத்திலிருந்து நேரடியாக யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தால் யாழில் குறைந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு வவுனியாவில் இருந்து வாரத்திற்கு ஒருதடவை 10 லொறிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க உத்தேசித்துள்ளதாக அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் மேலும் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறியிடமும் விளக்கிக் கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஓ-6)

இலத்திரனியல் ஊடான காசுக் கட்டளை தபால் திணைக்களத்தின் புதிய நடவடிக்கை

(கொழும்பு)

இலத்திரனியல் ஊடாக காசுக் கட்டளைகளை அனுப்பும் புதிய நடவடிக்கையை தபால் திணைக்களம் நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக தபால் மா அதிபர் எம்.கே.பீ. திஸாநாயக்க தெரிவித்தார்.

தகவல் தொழில் நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு இணையதளம் ஊடாக மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் காசுக் கட்டளைகளை துரிதமாகவும் கிரமமாகவும் அனுப்பி வைக்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்புதிய நடவடிக்கையின் மூலம் பணம் அனுப்பும் நபரின் தேவை 5 முதல் 10 விநாடிகளில் நிறைவேறுகிறது. முதல் கட்டமாக ஒரே நேரத்தில் ஒருவருக்கு கூடிய பட்சம் 25 ஆயி ரம் ரூபாவை அனுப்பி வைக்க முடி யும்.

ஆரம்ப நடவடிக்கையாக 643 தபால் நிலையங்கள் ஊடாக இப்புதிய திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. எதிர்வரும் செப்டெம்பர் மாதம் அளவில் நாட்டிலுள்ள அனைத்து தபால்நிலையங்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

உள்ளூராட்சி வாரம்
ஜூலை 13 தொடக்கம் 19

உள்ளூராட்சி வார நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கிடையிலான போட்டிகளில் பங்குபற்றிய மாணவிக்கு ஆசிரியர் திருமதி சி. மங்களகுமாரி பரிசில் வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

(படம் : சாவகச்சேரி நிருபர்)

இராசி பலன்

31.07.2009
(ஆடி 15, வெள்ளிக்கிழமை)
தசமி முன்னிரவு 10.01 மணிவரை
அனுஷம் பின்னிரவு 2.37 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
வரலஷ்மி விரதம்

மேடம்	அபகீர்த்தி, வாகனபயம், வேலைச் சுமை, முயற்சிதாமதம்.
இடபம்	தெய்வசிந்தை, களஸ்திர நன்மை, போசன சுகம், காரிய அனுகூலம்.
மிதுனம்	மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், ஆரோக்கிய நிலை, நண்பர்கள் உதவி.
கடகம்	புத்திரரால் கவலை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், பணக் குறைவு.
சிங்கம்	மனச்சோர்வு, தனவிரயம், உறவினர் சந்திப்பு, போசன சுகம்.
கன்னி	நற்கீர்த்தி, காரிய அனுகூலம், அந்நியர் சந்திப்பு, போசன சுகம்.
துலாம்	போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், முயற்சி தாமதம், திடீர் நன்மை.
விருச்சிகம்	வெகுமானம், உறவினர் வருகை, நல்ல முயற்சி, தெய்வசிந்தை.
தனுசு	சோம்பல் நிலை, எடுத்த காரியம் தாமதமாகும், சுபசெலவு, கோபப் படுதல்.
மகரம்	தனதானிய சேர்க்கை, சயன சுகம், ஆனந்தம், குடும்ப நன்மை.
கும்பம்	பெரியோரால் மதிக்கப்படுதல், இஷ்ட சித்தி, ஆரோக்கிய நிலை, போசன சுகம்.
மீனம்	இடமாற்றம், எதிர்பாராத செலவு, வீண் பயம், சரீரப் பிரயாசை.

வளவன்

குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	யாழ்ப்பாணம்	சாவகச்சேரி
1 Kg	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	80	100	60
உருளைக்கிழங்கு	100	110	100
பச்சைமிளகாய்	40	60	50
தக்காளி	90	120	140
மரவள்ளிக்கிழங்கு	50	60	60
கோவா	140	140	--
கரட்	100	110	80
பூசணி	30	50	40
புடோல்	30	50	30
வாழைக்காய்	45	50	60
சின்ன வெங்காயம்	50	60	30-50
பெரிய வெங்காயம்	80	100	90
பாகற்காய்	60	80	60
வெண்டிக்காய்	30	50	20
கரணைக் கிழங்கு	60	80	--
பயிற்றங்காய்	40	60	30
லீக்ஸ்	60	80	80
பீற்றூட்	40	60	40
கறிமிளகாய்	40	60	60
முருங்கைக்காய்	200	250	240
கீரை - 1 பிடி	15-20	20	20
தேசிக்காய்	40	50	60
தேங்காய் (ஒன்று)	25	30	25

ஏகாதசி விரத உற்சவம்

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லி புரநாதர் தேவஸ்தானத்தில் (01.08.09) நாளை சனிக்கிழமை வளர்பிறை ஏகாதசி விரத உற்சவம் இடம்பெறவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு சங்கல்பத்துடன் ஆரம்பித்து அபிஷேக, ஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி வலம் வரும் திருக்கோலக் காட்சி இடம்பெறவுள்ளது. (ஓ-36)

கல்வி விழிப்புணர்வு செயலமர்வு

பாடசாலை செல்லாத, இடைவிலகிய மாணவர்களை இனங்கண்டு கல்வி வழங்குவதற்கும், வரவு ஒழுங்கீனமான மாணவர்களின் வரவை சீராக்கம் செய்வதற்கும், கட்டாயக் கல்வி, முதியோர் கல்வி வேலைத் திட்டங்களை சிறப்பாக முன்னெடுப்பதற்காக வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்வி செயற்றிட்ட அலுவலரால் ஒழுங்குசெய்யப்பட்டு ஈவினை அ.த.க.பாடசாலையில் நாளை சனிக்கிழமை பெற்றோர்கள், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயலமர்வு நடைபெறவுள்ளது.

செயலமர்வில் உடுவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம், ஓய்வு பெற்ற அதிபர் ஆ.சி.நடராஜா, ஈவினை அ.த.க. பாடசலை அதிபர் செ.பரமேஸ்வரன், செயற்றிட்ட அலுவலர் ந. சண்முகராஜா, கிராம அலுவலர் இ.மயூரதன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர். (ஓ-6)

முன்பள்ளி விளையாட்டு போட்டி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி குடும்ப முன்பள்ளி விளையாட்டுப் போட்டியில் புவேந்தன், உதயசூரியன், ஸ்ரீமுருகன்,டேனுஜா, குழந்தை யேசு, நாமகள் ஆகிய முன்பள்ளிகள் பங்குபற்றியுள்ளன.

இதில் 171 புள்ளிகள் பெற்று புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய முன்பள்ளி முன்னணியிலும், இசைவும் அசைவும் நிகழ்வில் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

சம்பியன்களாக புவேந்தன் முன்பள்ளியைச் சேர்ந்த ம.மதுஷன், பா.புருசோத்தமி, ஜெ.விஸ்ணவி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-29)

விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இரண்டு பேருந்துகள் ஒன்றையொன்று முந்திச் செல்ல முற்பட்டவேளை வீதியருகே மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் மின்கம்பத்துடன் மோதுண்டு தலை மற்றும் கை ஆகிய பகுதிகளில் படுகாயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடுள்ளார்.

கோண்டாவில் உப்புமடப் பிள்ளையார் கோயில் வீதயில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ்.சந்திரகுமார் (வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.

குறித்த நபர் நேற்றுக் காலை 9.30 மணிக்கு தான் ஆலயத்திற்குச் [illegible] டிருந்ததாகவும் அவ்வேளை அரச பேருந்தினை தனியார் பேருந்து முந்திச் செல்ல முற்பட்டபோது செய்வதறியாது மின்கம்பத்துடன் மோதுண்டதில் பேருந்தின் கீழிருந்து தான் மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். (ஓ-30)

நல்லூர் திருவிழா வசதி மேம்பாடுகள் குறித்து

உயர்மட்டக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்த சுவாமி கோவிலின் வருடாந்த திருவிழா தொடர்பிலான வசதி மேம்பாடுகள், பக்தர்களுக்கான வசதிகள், அப் பகுதியின் இயல்புநிலை, பாதுகாப்பு சார்ந்த விடயங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 6 மணியளவில் உயர்மட்டக் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

நல்லை ஆதீனத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் நல்லை ஆதீன குரு முதல்வர்,சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மேலதிக அரச அதிபர்,மாநகர சபை ஆளுநர், பொலிஸ் உயரதிகாரிகள் மற்றும் சமூகப் பெரியார்கள் பலரும் கலந்துகொண்டனர்.

முன்னைய காலங்களை விட இம் முறை நல்லூர் தேர்த் திருவிழாவை மிகச் சிறந்த முறையில் யாழ்.குடாநாட்டின் பக்தர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வகையில் நடாத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வருகின்ற நிலையில், இச் சந்திப்பில் பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

கோவில் திருவிழா தொடர்பிலான நிகழ்வுகளுக்கும், பக்தர்களுக்கும் அதேநேரம் கோவிலை அண்டிய பகுதி வாழ் மக்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் அனைத்துச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததற்கு இணங்கவே மேற்படி கூட்டம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஓ

நல்லூர் மஹோற்சவ கால நிகழ்வுகள்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நல்லூர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வு களில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00-6.00 மணிவரை "நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல்..." எனும் பொருளில் செஞ் சொற்செல்வர் ச. நவநீதனின் சிறப்புச் சொற் பொழிவும் தொடர்ந்து சங்கரத்தை துணைவி அற.பாடசாலை மாணவர்களின் கல்லை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. ஓ

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர்துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை6.30-7.30 வரை குமரேஸ் பஞ்சமூர்த்தியின் பாட்டு இடம் பெறவுள்ளது.

இதில் அணி செய் கலைஞர்களாக வயலின் A.ஜெயராமன், மிருதங்கம் S.துரைராசா, கெஞ்சிரா K.நந்தகுமார், முகர் சிங் S.செந்தூரன் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.ஓ

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் பனை விதை நடுகை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலக பிரிவுகளிலும் மொத்தம் 10 இலட்சம் பனை விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன.

இச் செயற்திட்டம் நவம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் முடிக்கப்படவுள்ளதாகவும், இது தொடர்பாக அந்தந்தப் பிரதேச செயலகங்கள் தம் பிரிவில் விதை நடுகை செய்யும் இடங்களை எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவு செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பனை, தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலக ரீதியாக நடுகை செய்யப்படவுள்ள பனை விதைகளின் தொகை வருமாறு,

நெடுந்தீவு 40 ஆயிரம்,வேலணை 80 ஆயிரம், ஊர்காவற்றுறை 150 ஆயிரம், காரைநகர் -50 ஆயிரம், யாழ்ப்பாணம்-20 ஆயிரம், நல்லூர்-20 ஆயிரம், சண்டிலிப்பாய் 80 ஆயிரம்,சங்கானை-ஒரு இலட்சம் தெல்லிப்பளை-20 ஆயிரம்,உடுவில் -20 ஆயிரம், கோப்பாய்-80 ஆயிரம், கரவெட்டி-50 ஆயிரம், பருத்தித்துறை-50 ஆயிரம், மருதங்கேணி-160 ஆயிரம், சாவகச்சேரி-80 ஆயிரம் ஆக மொத்தம் 10 இலட்சம் பனை விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. (ஓ-30)

கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தால் நாளை சனிக்கிழமை ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயத்தில் நடாத்தப்படவிருந்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி பாடசாலைகளில் நடைபெறும் பரீட்சை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும் மேற்படி போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு அதே கல்லூரியில் நடைபெறும் எனவும் யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். ஓ

செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.(உ/த) உயிரியல் கற்கும் மாணவர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

இச் செயலமர்பில் பரீட்சையில் மாண வர் விடும் தவறுகளை சுட்டிக்காட்டுவதுடன் மாதிரி வினாத்தாள் கலந்துரையாடலும் நடைபெறும். இதில் 2009 இல் பரீட்சை எழுதும் மாணவர்கள் தவறாது பங்குபற்று மாறு தொண்டமனாறு வெளிக்கள நிலையம் கேட்டுக் கொள்கிறது. ஓ

மூடப்பட்டிருந்த சந்தைப்பகுதி திறக்கப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தையின் தனங்கிளப்பு வீதியுடன் இணைந்த கிழக்குப் பகுதி மரக்கறி வியாபாரத்துக்காக திறந்துவிடப்பட்டுள்ளது.

பலகாலம் பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த மேற்படி மரக்கறி விற்பனைப் பகுதி தற்போது திறக்கப்பட்டு தற்காலிக கொட்டகையில் மரக்கறி வியாபாரிகள் வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர். (ஓ-29)

காந்திஜி முன்பள்ளி விளையாட்டு விழா

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நிலைய மைதானத்தில் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் S.B.அரசகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.ஓ

யாழ்.செய்திகள்

ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் எதிர்வரும்6 ஆம் திகதி அன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபையால் பாவிக்கப்பட்ட பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இவ் ஏலத்தில் கணனி உபகரணங்கள் தட்டெழுத்து இயந்திரங்கள் வாகன ரயர் ரீயூப்கள் பற்றரிகள், பக்ஸ் மெசின் என்பவை விற்கப்படவுள்ளதாக வலி கிழக்கு பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-6)

அறிவுறுத்தல் கூட்டம்

இடைக்காடு மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவு சமூக கற்கைநெறிக்கு விண்ணப்பித்தோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.வலய கல்வி அதிகாரிகள் கலந்து அறிவுறுத்தல்களை வழங்கவுள்ளனர்.

விண்ணப்பித்த ஆண்கள் சாதாரண சேட், லோங்ஸ், பெண்கள் சேலை, நீளச் சட்டை அணிந்து சமுகம் தருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓ

வட்டு இந்துக் கல்லூரியின் அபிவிருத்திக்காக பாடசாலை நுண்கலை மன்றம் நடத்திய மாபெரும் கலைவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சித்தன்கேணி சிவன் தேவஸ்தான பிரதமகுரு ச.வாசுதேவக் குருக்கள் மங்கல விளக்கேற்றுவதையும், கல்லூரி அதிபர் திருமதி அருள்மயம் ஜெகதீஸ்வரி, சங்கீத ஆசிரியை திருமதி இ.விஜயலட்சுமி, பகுதித்தலைவர் திருமதி மகிழ்ராஜன் ஆகியோர் அருகில் நிற்பதையும், மங்கல வாத்தியம் சகிதம் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், மாணவர்களின் கலைநிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-விஜயகாந்தன்)

எம்.எஸ்.ஓபீஸ் 2010 புதுமைகளும் வசதிகளும்



மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அடுத்த பெரிய சாதனையாக மைக்ரோசொப்ட் ஒபீஸ் 2010 வர இருக்கிறது. கணனி உலகில் தன் தொடுவான எல்லைகளை விரித்து பல புதிய அம்சங்களுடன் இந்தத் தொகுப்பு வர இருக்கிறது.

வழக்கமான பெர்சனல் கணனிக்கான ஒபீஸ் தொகுப்புடன் முதல் முறையாக இன்டர்நெட்டில் வைத்துப் பயன்படுத்தும் ஒபீஸ் தொகுப்பாகவும் இது வெளிவர இருக்கிறது. ஒபீஸ் 14 என்ற குறியீட்டுப் பெயருடன் 2006 ஆம் ஆண்டில்இதனைத் தயாரிப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டன.

ஒபீஸ் 12 என்ற பெயருடன் தொடங்கப்பட் ஒபீஸ் தொகுப்பு வேலைகள் முடிக்கப்பட்டு ஒபீஸ் 2007 தொகுப்பாக் வெளியிட்ட பின் மைக்ரோசொப்ட் ஒபீஸ் 14 என்று தன் அடுத்த தொகுப்பினைத் தொடங்கியது. (உலக மக்கள் 13 என்ற எண் மீது கொண்டிருக்கும் வெறுப்பு மைக்ரோசொப்ட் நிறுவனத்தையும் பற்றிக் கொண்டிருக்கலாம்)

Microsoft Office 2010
Plus ! Pro
Extended
Client

சென்றவாரம் அதிகாரபூர்வமாக ஒபீஸ் 2010 குறித்த அறிவிப்பு வெளியானது. முழுமையான தொகுப்பின் பயன்பாடு குறித்த விவரங்கள் வெளியிடப்படவில்லை என்றாலும் அதன் தனித் தன்மைகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் போன்றவை சற்று வெளிவரத் தொடங்கின.

இந்த ஒபீஸ் 2010 தொகுப்பு இது பயன்படுத்துவோருக்கான தன்மையினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதாவது ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் ஈடுபடும் மேல்மட்ட ஆய்வாளர்கள் மற்றும் அறிஞர்கள், விற்பனைச் சந்தையில் ஈடுபடும் அலுவலர்கள், மனித வள மேம்பாட்டு பிரிவுகளில் ஈடுபடுவோர் என ஒருவரின் வேலைத் தன்மைக்கேற்ப இந்த ஒபீஸ் தொகுப்பினைச் செயல்படுத்த வழி தரப்பட்டிருக்கும்.

இந்த தொகுப்புடன் சேர்த்து மைக்ரோசொப்ட் இணைய அடிப்படையில் இயங்கும் ஒபீஸ் தொகுப்பினை வழங்க இருக்கிறது. வெப் பேஸ்ட் அப்ளிகேஷன் என அழைக்கப்படும் இத் தொகுப்பில் எக்ஸெல், பவர்பொய்ண்ட், வேர்ட் மற்றும் ஒன் நோட் அப்ளிகேஷன்கள் கிடைக்கும்.

இவை இயக்கிக் காட்டப்பட்டன. பிரவுசரின் வழியாகச் சென்று இந்த அப்ளிகேஷன் தொகுப்புகளை இயக்கி பைல்களை நாம் தயாரிக்க முடியும். இந்த வெப் அப்ளிகேஷன்கள் சபாரி, பயர் பொக்ஸ் மற்றும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் வழியாக இயங்கும்.இதன் மூலம் ஒபீஸ் தொகுப்பினை பயன்படுத்துவோர் எண்ணிக்கை அதிகரிப்பது மட்டுமன்றி இந்த மார்க்கெட்டில் இதுபோன்ற அப்ளிகேஷன்களை மைக்ரோசொப்டிற்கு எதிராகக் கொண்டு வரும் கூகுள் டாக்ஸ் போன்ற மற்ற வெப் அப்ளிகேஷன் புரோகிராம்களுக்கு போட்டியாகவும் இது இருக்கும்.

ஒபீஸ் தொகுப்பு 2010 இரு வகைளில் தரப்பட இருக்கிறது. 32 பிட் அமைப்பிலும் 64 பிட் அமைப்பிலும் இயங்கும் வகையில் இரண்டு வகை தரப்படும். ஒபீஸ் தொகுப்பு ஒன்று இவ்வாறு இரண்டு வகைகளுக்கும் தரப்படுவது இதுவே முதன் முறையாக இருக்கும். இதன் வேர்ட் தொகுப்பின் புதுமையாக இமேஜ் எபக்ட்ஸ் கூட்டாகத் தரப்படுகிறது. வேர்ட் மற்றும் பிற ஒபீஸ் புரோகிராம்களில் பேஸ்ட் பிரிவியூ என்ற ஒட்டு முன் காட்சி தரப்படுகிறது.

இதன்மூலம் பேஸ்ட் பயன்படுத்துபவர்கள் அது எப்படி தோற்றமளிக்கும் என்பதனை அறிந்து தங்கள் விருப்பத்திற்கேற்ப பல பேஸ்ட் முறைகளை சோதனை செய்து பார்த்து செயற்படலாம்.

எக்ஸெல் தொகுப்பில் ஸ்பார்க்லைன்ஸ் (Sparklines) என்றொரு வசதி தரப்படுகிறது. ஸ்ப்ரெட் ஷீட் ஒன்றில் காணப்படும் செல் ஒன்றில் அமையும் வகையில் உள்ள சிறிய கிராப் ஆக இது இருக்கும். பவர்பொய்ண்ட் தொகுப்பில் வீடியோ எடிட்டிங் வசதிகள் தரப்படுகின்றன. பிரசன்டேஷன் ஒன்றின் வீடியோ காட்சி எப்படி இருக்கும் என்பதனை இந்தத் தொகுப்பின் மூலமே அறிந்து கொள்ளலாம்.இதில் வாய்ஸ் அனொடேஷன்ஸ் இணைந்து இருக்கும்.

அவுட்லுக் இமெயில் மற்றும் கலண்டர் வசதிகளில் ஜிமெயில் உள்ளது போல கொன்வெர்சேஷன் வசதி கிடைக்கிறது. இதற்கு மேலாக "Ignore thread" ஒன்று தரப்படுகிறது.இதன்மூலம் மெசேஜைப் பார்த்துவிட்டு அதனை அலட்சியப்படுத்தி வைக்கும் வசதி கிடைக்கிறது. இதில்"மெயில் டிப்ஸ் வசதிஉள்ளது.இது டொகுமெண்ட் ஒன்றை இமெயில் மூலம் அனுப்புகையிலும் பல ருக்கு ஒரே மெசேஜை அனுப்புகையிலும் அது நாகரிகமாக இருக்கவேண்டியதற்கான டிப்ஸ் களை அளிக்கிறது.

ஒபீஸ் 2010 உடைய ஒவ்வொரு அப்ளிகேஷன் தொகுப்பிலும் பைல் கையாளும் விதங்களில் கூடுதல் வசதிகள் தரப்படுகின்றன. பைல் சேவிங், பைல் பிரிண்டிங் போன்ற பணிகளுக்கு ஒரு பக்ஸ்டேஜ் வியூ அளிக்கப்படுகிறது.இதன் மூலம்மேற்கொள்ளப்படும் வேலை எப்படி அமையும் என முன்கூட்டியே கண்டு கொள்ளலாம்.

. ஒரே டொகுமெண்ட்டை ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் எடிட் செய்திடலாம். இதனால் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆசிரியர்களாக இருந்து தயாரிக்கப்படும் பல பகுதிகள் அடங்கிய ஒரு டொகுமெண்ட்டை ஒரே நேரத்தில் அதன் ஆசிரியர்கள் அனைவரும் கையாளக் கூடிய வசதி கிடைக்கிறது.

முன்பு போலன்றி இந்த ஒபீஸ் தொகுப்பு மூன்று வகைகளில் மட்டுமே கிடைக்கிறது. ஆபீஸ் ஹோம் மற்றும் மாணவர்க்கான பதிப்பு ஒன் நோட்,வேர்ட், எக்ஸெல் மற்றும் பவர் பொய்ண்ட் தொகுப்புக்களுடன் கிடைக் கும்.ஒபீஸ் ஹோம் மற்றும் பிசி னஸ் தொகுப்பில் மேலே குறிப் பிடப்பட்டவற்றுடன் அவுட் லுக் இணைந்திருக்கும்.ஒபீஸ் புரப ஷனல் தொகுப்பில் மேலே சொல்லப்பட்ட அனைத்து அப்ளிகேஷன் புரோகிராம்களுடன் அக்செஸ் டேட்டா பேஸ், மற்றும் பப்ளிஷர் பேஷ் லேஅவுட் புரோகிராம்கள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கான தொகுப்பினைப் பார்க்கையில் மைக்ரோசொப்ட் ஒபீஸ் ஸ்டாண்டர்ட் தொகுப்பு பயனளிக்கும். அதிக எண்ணிக்கையில் விற்பனைக்கு பெறும் வர்த்தக வாடிக்கையாளர்களுக்கான பதிப்பாக இது இருக்கும்.இதில் எக்ஸெல், அவுட்லுக், பவர் பொய்ண்ட், வேர்ட், ஒன் நோட் மற்றும் பப்ளிஷர் கிடைக்கும். இறுதியாக உள்ள இரண்டு அப்ளிகேஷன்களும் இந்த வகை பதிப்பில் புதிதாக இப்போது சேர்க்கப்படுகின்றன. ஒபீஸ் ஸ்டாண்டர் பதிப்பிற்கான லைசன்ஸ் பெற்றவர்கள் பிரவுசர் அடிப்பிடையிலான பதிப்பினைக் கையாளும் உரிமையினைப் பெறுவார்கள்.

ஒபீஸ் 2007 இல் இருக்கும் ஒபீஸ் பட்டனுக்குப் பதிலாக மெனு பட்டன் தரப்படும்.இதன் மூலம் முழு விண்டோ பைல் மெனுவினைப் பெறலாம். இதனை பக் ஸ்டேஸ் வியூ என மைக்ரோசொப்ட் அழைக்கிறது. இதன்மூலம் பிரிண்டிங் மற்றும் பைல் ஷேரிங் பணிகளை எளிதாகக் கையாள முடியும்.

ஒபீஸ் 2010 குறித்த விஷயங்கள் வெளியானவுடன் பலர் விதம் விதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். அவற்றை மைக்ரோசொப்ட் தெளிவாகத் தீர்த்து வைத்துப் பல கூடுதல் தகவல்களைத் தந்துள்ளது. அவற்றை இங்கு காணலாம்.

பேர்சனல் கணனி அடிப்படையிலான ஒபீஸ் தொகுப்பும் இன்டர்நெட் அடிப்படையிலான ஒபீஸ் தொகுப்பும் ஒரே செயல்பாட்டுடையனவாக இருக்குமா? நிச்சயமாக இல்லை. இன்டர் நெட் வழி பயன்பாட்டிற்கத் தரப்படும் தொகுப்பில் வேர்ட், எக்ஸெல், பவர்பொய்ண்ட் மற்றும்ஒன் நோட் மட்டுமே இருக்கும்.மேலும் இவற்றைப் பயன்படுத்தும் எல்லைகளும் சுருக்கமாகவே இருக்கும். வெப் அடிப்படையிலான ஒபீஸ் 2010 தொகுப்பினால் பின் என்ன பயன்?, இது முற்றிலும் பிரவுசர் வழியாகச் சென்று இயக்கப்படும் தொகுப்பாகவும் குறைந்தளவே வசதி கொண்டதாகவும் இருக்கும். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் ஒரு டொகுமெண்ட்டை பலர் எடிட் செய்திடலாம்.

வெப் அடிப்படை ஒபீஸ் தொகுப்பில் உருவாகும் பைல்களை ஒன்லைனிலேயே சேவ் செய்து வைக்கமுடியுமா? முடியும். ஆனால் அதற்கு இலவசமாகக் கிடைக்கும் விண்டோஸ் லைவ் ஸ்கை டிரைவ் எக்கவுண்ட் ஒன்றினைப் பெற்றிருக்வேண்டும் வெப் ஒபீஸ் தொகுப்பு முற்றிலும் இலவசமாகக் கிடைக்குமா? ஆம் முற்றிலும் இலவசமாகவே இது கிடைக்கும். இலவச விண்டோஸ் லைவ் ஐ.டி. மூலம் இதனைப் பெற முடியும்.வெப் ஒபீஸ் தொகுப்பில் அனைத்தும் கிடைக்கிறது என்றால் நான் ஏன் பேர்சனல் கணனி ஒபீஸ் தொகுப்பு 2010 ஐ இன்ஸ்டால் செய்திட வேண்டும்?

வெப் ஒபீஸ் தொகுப்பு குறிப்பிட ஒரு எல்லை வரையிலான வசதிகளையே தரும்.நான்கு அடிப்படை புரோகிராம்களே இதில் கிடைக்கும். கூடுதல் வசதிகளையும் நவீன தொழில்நுட்ப வசதிகளையும் பயன்படுத்த பேர்சனல் கணனி அடிப்படையிலான ஒபீஸ் தொகுப்பினை வாங்கிப் பயன்படுத்த வேண்டும். இதிலும் ஒபீஸ் 2007 இல் உள்ளதுபோன்ற ரிப்பன் மெனு இருக்குமா? ஆம். இதிலும் அதன் பயன்பாடு இருக்கும். ஆனால் இன்னும் கூடுதலாக நீட்டிக்கப்பட்டு இருக்கும். ஒபீஸ் தொகுப்பு அனைத்தையும் இதன்மூலம் பெற்று கையாள முடியும். பொதுவான வேலைகளை இப்போது ரிப்பன் மெனுவில் இணைக்கவும், தேவையற்றவற்றை நீக்கவும் முடியும்.

வேர்டில் என்ன புதுமை ? பேஸ்ட் பிரிவியூ ஒப்ஷன், டெக்ஸ்ட்டுக்கு ஸ்டைல் அமைப்பதில் கூடுதல் வசதி, வேர்ட் புரோகிராமினை விட்டு வெளியேறாமல் ஸ்கிரீன் ஷொட்களை இணைக்கும் வசதி,இமேஜ் எடிட் செய்வதற்கான புதிய டூல்ஸ் எனப் பல புதுமைகள் உள்ளன. அவுட்லுக்கில் என்ன புதுமை? ஜிமெயிலில் உள்ளதுபோல சார்ந்த தொடர்பான இமெயில்களை ஒரு குழு உரையாடல் போல வைத்துப் பார்க்கும் வசதி தரப்படுகிறது.பொதுவான வேலைகளை மேற்கொள்ள ஷோர்ட்கட் வசதி, கொண்டிராக்ட் லிஸ்ட்டுக்கு இன்பொக்ஸிலிருந்தே செல்லும் வசதி, ஒன் டிமாண்ட் மொழிபெயர்ப்பு டூல்ஸ் ஆகியவை புதிய வசதிகளாகும். எக்ஸெல் என்ன தருகிறது? ஸ்பார்க்லைன் என்ற (மேலே விளக்கப்பட்டுள்ளது) சிறிய சார்ட் இணைக்கும் வசதி. டேபிள் அமைப்பு மற்றம் கையாள்வதில் கூடுதல் வசதி மற்றும் டேட்டாக்களைக் கையாள்வதில் கூடுதல் வசதிகள் ஆகியவை உள்ளன.

பவர்பொய்ண்டில் என்ன புதுமை? ஆச்சரியப்படத்தக்க புதுமை இதில் தான் உள்து. பலவகையான போர்மட் வீடியோக்களை இதில் இணைக்கலாம்.இணைத்த பின் இத் தொகுப்பில் இருந்தே அவற்றை எடிட் செய்திடலாம்.முதல் முறையாக உங்கள் ஸ்லைட் ஷோவினை ஒரு முழு விண்டோஸ் மீடியா பைலாக மாற்றிப் பெறலாம்.

உங்களுக்கு ஒபீஸ் 2010 தொகுப்பினை அது முழுமையாக வெளிவருவதற்கு முன் சோதனை செய்து பார்க்க ஆவலாக உள்ளதா? இதற்கென மைக்ரோசொப்ட் தந்திருக்கும் தளம் http://www.office2010themovie.com சென்ற உங்கள் இமெயில் முகவரி யினைப் பதிந்து வைத்துக்கொள்ளுங்கள்.

Google
Windows 7

கணனி உலகில்

ஆர்.யூ.பாலமுருகன்

குழந்தைகளுக்கான தளங்கள்

கணனிகள் இன்றும் நம் வாழ்வில் ஓர் அத்தியாவசிய சாதனமாக மாறிவிட்டது. கணனியின் அடிப்படையையும் அதனை இயக்குவதையும் தெரிந்து கொள்வது இன்றியமையாத ஓர் திறனாக அமைந்து விட்டது. எனவே குழந்தைகள் கற்கத் தொடங்கியவுடன் கணனி இயக்கத்தினையும் தெரிந்து கொள்ள வேண்டும். கற்றுக்கொள்வது எப்போதும் முறையோடு தொடங்கிச் சீராகச் செயல்பட வேண்டும். அப்போதுதான் ஆழமாக எதனையும் புரிந்து கற்றுக்கொள்ள முடியும். இங்கு குழந்தைகள் அவசியம் கற்றுக்கொள்ள கிடைக்கும் இலவச கணனி புரோகிராம்கள் குறித்த தகவல்கள் தரப்படுகின்றன.

Tux of Math command

அனைத்து அறிவியலுக்கும் கணிதமே அடிப்படை என்று சொல்லப்படுகின்றது. குழந்தைகளுக்கு அவர்கள் கற்றலின் தொடக்கத்திலேயே கணிதத்தைக் கற்றுக்கொடுத்தால் கணிதத்தின் அடப்படை குறித்த நல்ல அறிவு பெறுவதுடன் தொடர்ந்து அறிவியலின் அனைத்து பரிமாணங்களையும் கற்றுக்கொள்ள எளிதாக இருக்கும்.

இந்த புரோகிராம் அதனைத் தருகிறது. சில விளைங்காட்டுக்கள் மூலம் முதலில் கூட்டல் கழித்தல் பெருக்கல் மற்றும் வகுத்தலை இது கற்றுக் கொடுக்கும் வழி சிறப்பாக உள்ளது. எடுத்துக் காட்டாக ஓர் எரி நட்சத்திரம் பூமியை நோக்கி வருகிறது. அதில் கணக்கு ஒன்று காட்டப்படுகிறது. கீழே ஐஸ் கட்டி வீடும் அதனுள் பெங்குவின் பறவைகளும் உள்ளன. குழந்தை தான் பெங்குவின் பறவை. எரி நட்சத்திரம் பூமியை நெருங்கும் முன் இந்த பெங்குவின் அதனை அழிக்கவேண்டும். எப்படி அழிக்க முடியும்? அந்த எரி நட்சத்திரத்தில் உள்ள கணக்கிற்கு விடை தர வேண்டும்.

இந்த வகையில் கணிதம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. எந்தக் குழந்தைக்குத்தான் இது மகிழ்ச்சியைத்தராது. அதே சமயத்தில் கணிதத்திலும் திறன் வளரும் இந்த புரோகிராமினைப்பெற http://tux4kids.alioth.debian.org/tuxmath/download.php என்ற முகவரியில் உள்ள தளத்திற்கு செல்லவும் விண்டோஸ் மேக் மற்றும் லினக்ஸ் என அனைத்து ஒப்பரேட்டிங் சிஸ்டங்களுக்கான புரோகிராம்கள் தரப்பட்டுள்ளன.

இதோ ஒரு வினாடி வினா

பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்கு (உங்களின் டிஜிட்டல் உலகத் தொடர்பைப் பொறுத்து) முன்பு இன்டர்நெட் என்பது அறிவியல் உலகின் புதுமைச் சொல்லாய், பலருக்கு ஆச்சரியத்தைத் தந்த ஒரு கண்டுபிடிப்பாய் இருந்தது.

ஆனால் உலகின் பெரும்பாலானவர்களுக்கு இன்டர்நெட் இல்லாத ஒருநாள் வாழ்க்கையை இன்று கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க இயலவில்லை.

இன்றைய இமெயிலுக்குப் பதிலாக அன்று என்ன செய்தோம்? என்று நினைத்துப் பார்த்தால் அது ஒரு வாழ்க்கையா என்று நாமே நம் மீது பரிதாபப்படுவோம்.

இங்கே இன்டர்நெட் குறித்து ஒரு வினாடி வினா டெஸ்ட் தரப்படுகிறது. விடைகள் கீழேயே தரப்பட்டுள்ளன. விடையைப் பர்க்காமல் கேள்விகளுக்குப் பதில் குறித்து உங்களுக்குத் தெரிந்ததை சோதித்துக் கொள்ளுங்கள்.கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் படித்து அவை சரியா? தவறா? என்று நீங்கள் கண்டறிய வேண்டும்.தவறு என்றால் தகவலையும் தரவேண்டும்.

1.கோர் என்பவர் தான் இன்டர்நெட்டைக் கண்டுபிடித்தார்.

2.உலகின் மக்கள் தொகையில் கால்வாசிப் பேர் இன்டர்நெட்டைப் பயன்படுத்துகின்றனர்.

3.ஜுன் 2009 வரையில் ஒரு கோடியே80 இலட்சம் இணையத் தளங்கள் பதிந்து வைக்கப்பட்டுள்ளன.

4.இன்டர்நெட்டின் முக்கியமான முன்னோடி netlinx. இது 1979 இல் தொடங்கப்பட்டு ஹார்வேர்ட் மற்றும் எம்.ஐ.டி.யை இணைத்தது.

5. 1996 ஆம் ஆண்டு வந்த சாம்சங் ஐ-5000 என்பதுதான் இன்டர்நெட்இணைப்பைத்தந்த முதல் மொபைல் போன்

6. முதன்முதலில் 1993 இல் அறிமுகப்படுத்தப்பட்டு மொசைக் Mosaic எனும் வெப்பிரவுசர் தான் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது.

7. டொட் கொம் பப்பில் பர்ஸ்ட் என்று சொல்லப்பட்ட டொட் கொம் புகழ் உயர்வு மார்ச் 10 2000 அன்று நிகழ்ந்தது.

8. யூலை 1 2009 ற்குப் பின் சீனாவில் விற்பனை செய்யப்படும் கணனியில் கட்டாயமாக ஒரு சொப்ட்வெயர் இணைக்கப்படுகிறது. இதனால் பாலியல் சார்ந்த எந்த சொல்லையும் அதில் டைப் செய்து இன்ரர்நெட்டில் தேட முடியாது.

1. தவறு. கோர் ஒரு கூட்டத்தில் கூறியது தவறாக எடுக்கப்பட்டு அப்படியே அவர்தான் இன்டர்நெட்டை கண்டுபிடித்தார் என்று பரவியது. ஆனால் 1950 முதல் 1970 வரை சில குழுவினர் எடுத்த முயற்சிகளின் விளைவே இன்டர்நெட் ஆகும். யாரேனும் ஒருவரை இதற்கு காரண கர்த்தாவாக கூற வேண்டுமென்றால் J.C.R. Licklider என்பவரைக் கூறலாம் என்று பல இணையத் தளங்கள் கூறுகின்றன. காண்க. Http://www.techfaq.com/whoinventedinternet.shtml

2. தவறு. அட்வான்ஸ் மக்ரோ டிவைசஸ் என்னும் அமைப்பின் கணக்குப் படி கால்வாசிப்பேர் கணனி பயன்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் அனைவரிடமும் இன்டர்நெட் அமைப்பு இல்லை.

3. தவறு. 18 கோடி பெயர்கள் பதிந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பெயர்களை யாரும் எளிதாகப் பட்டியலிட முடியாது.

4. முற்றிலும் தவறு. இன்டர்நெட்டின் முன்னோடி 1969 இல் உருவாக்கப்பட்ட Arpanet ஆகும். Stanford மற்றும்Ucl ஆகிய இரண்டும் முதலில் இணைக்கப்பட்டன.

5. ஆண்டு சரிதான் ஆனால் அது சாம்சங் போன் இல்லை. நொக்கியா 900 கொம்யூனிகேட்டர் தான் முதன் முதலாக இன்டர்நெட்டை மொபைல் போனில் கொண்டுவந்தது .

6. உண்மை. ஆனால் அடுத்த ஆண்டிலேயே வந்த நெட்ஸ்கேப் கெம்யூனிகேட்டர் அதன் இடத்தைப்பிடித்துக்கொண்டு பல ஆண்டுகள் பிரவுசர் சந்தையில் முதல் இடத்தைக் கொண்டிருந்தது.

7. இல்லை. அது மார்ச் 10. 2000 நாஸ்டாக் அன்றுதான் அதன் உச்சக் கட்டத்தை எட்டியது .

8. உண்மை தான்Green Dam என்பது அந்த சொப்ட்வேர் தொகுப்பின் பெயர். ஆனால் பாலியல் சம்பந்தப்பட்ட சொல் மட்டுமல்ல அந்த நாட்டு அரசுக்கு எதிரான இணையத் தளம் சார்ந்த எந்த சொல்லையும் டைப் செய்திட முடியாது. எடுத்துக்காட்டாக tiananmen square protests என்பது போன்ற சொற்கள் எல்லாம் எடுபடாது

மைக்ரோ சொப்ட் மற்றும் யாஹூ நிறுவனங்கள் இணைந்து பணியாற்ற முன்வந்துள்ளன

முன்னணி இணையதள தேடல் இயந்திரமாக உள்ள கூகுள் நிறுவனத்துடன் போட்டி போடும் முயற்சியாக முன்னணி அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்களான மைக்ரோசாப்டும், யாகூவும் ஒரு இணைய தள தேடல் இயந்திரத்தை உருவாக்க கூட்டு சேருவதாக அறிவித்துள்ளன.

இந்த உடன்படிக்கையின் படி யாகூ தளங்களில் மைக்ரோசாப்டின் பிங் தேடல் இயந்திரம் பயன்படுத்தப்படும். மைக்ரோசாப்டின் கம்யூட்டர் தொழில்நுட்பத்தை தனது விளம்பர வருவாயை கையாள யாகூ பயன்படுத்தும்.

இந்த உடன்படிக்கை காரணமாக ஆண்டு தோறும் தனக்கு ஐநூறு மில்லியன் டாலர்கள் வருவாய் கிடைக்கும் என்று யாகூ கூறியுள்ளது.

கடந்த ஆண்டு பல பில்லியன் டாலர்கள் கொடுத்து யாகூ நிறுவனத்தை வாங்க மைக்ரோசாப்ட் முன்வந்தது.

ஆனால் மைக் ரோசாப் டின் இந்த முயற்சி நிராகரிக்கப்பட்டது. (ஓ-6)

‘ரோபோ’ தீயணைப்புப் படை



தீயணைப்பு நடவடிக்கைகளில் ‘ரோபோ’ குழுவொன்று எத்தகைய மதிநுட்பத்துடன் செயற்படுகிறது என்பது தொடர்பான செயல்முறை விளக்க நிகழ்ச்சியொன்று லண்டனில் நடைபெற்றது.

பாதுகாப்பு ஒப்பந்த நிறுவனமான கினெதிக் ஏற்பாட்டில் இந் நிகழ்வு இடம் பெற்றது.

எரிவாயு தாங்கிகள் மற்றும் தொழிற்துறை வாயுவான அசெதிலீன் சம்பந்தப்பட்ட தீ விபத்துகள் தீயணைப்பு படை வீரர்களின் உயிர்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடியவையாக உள்ளன.

இந்நிலையில் டீசல் எரிபொருள் மூலம் சக்தியூட்டப்பட்டு விரைவாக இயங்கவும் படியேறவும் கூடிய இந்த ரோபோக்கள், தீயணைப்பு நடவடிக்கைகளின் போது மனித உயிர்களுக்கு ஏற்படும் அபாயங்களைத் தடுக்க உதவும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த ரோபோக்களை உருவாக்குவதற்கான இரு வருட கால நிகழ்ச்சித் திட்டத்துக்கு லண்டன் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை முகவர்நிலையம் நிதியுதவி வழங்கியுள்ளது. (ஓ-6)

பங்களாதேஷ் பரசிற்றமோல் மருந்தில் இரசாயன நஞ்சு

(பங்களாதேஷ்)

பங்களாதேஷில் அண்மைய வாரங்களில் 24 சிறுவர்கள் உயிரிழப்பதற்கு காரணமாக அமைந்த பரசிற்மோல் கரைசல் மருந்தில், நச்சுத்தன்மையுள்ள டயதிலீன் கிளைக்கோல் என்ற இரசாயனப் பதார்த்தம் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த இரசாயனமானது புடைவை மற்றும் தோல் பதனிடல் தொழில் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

வழமையான கரைசல் உள்ளடக்கங்களை விட டயதிலீன் கிளைக்கோல் 10 மடங்கு மலிவானது என்பதால் அது பரசிற்றமோல் கலவையுடன் கலக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் சுகாதார அமைச்சர் ஏ.எப். எம். ருஹூல் ஹக் தெரிவித்தார்.

இந்நிலையில் மேற்படி பரசிற்றமோல் மருந்தைத் தயாரித்த உள்ளூர் கம்பனியை அதிகாரிகள் மூடியுள்ளனர்.

1990 களில் பங்களாதேஷில் பரசிற்றமோல் பாவனையால் 300க்கும் மேற்பட்டவர்கள் பலியாகுவதற்கு டயதிலீன் கிளைக்கோல் காரணமாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

இங்கிலாந்தில் ‘சூனியக்காரர்’ வேலைக்கு நேர்முகத் தேர்வு

வருடசம்பளம் 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்

கரோல் போஹனன்

தென்மேற்கு இங்கிலாந்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க குகைகளில் கொடூர சூனியக் காரராக பணியாற்ற ஆண்களிடமும் பெண்களிடமுமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

விண்ணப்பதாரி சூனியக்காரர் போன்று வேடமிட்டு அச்சம் ஊட்டும் வகையில் அலறக் கூடியவராக இருப்பதுடன் பூனைகளுடன் பழகுவதில் ஒவ்வாமைக்கு உள்ளாதவராகவும் இருக்க வேண்டும் எனவும் ஒரு வருட சம்பளமாக 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண் வழங்கப்படும் எனவும் விளம்பரம் செய்யப்பட்டது.

மேற்படி குகைகளில் சூனியக்காரியாக வலம் வந்த ஜேன் பிரேன்னர் ஓய்வு பெறுவதையொட்டியே இந்த நேர்முகத் தேர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த வேலைக்கு மூவாயிரத்துக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 400 பேர் தெரிவு செய்யப்பட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டனர்.

அவர்களுக்கான நேர்முகத் தேர்வு சமர் ஸெட்டிலுள்ள வூகி ஹோல் குகைகளில் திகிலூட்டும் சூழ்நிலையில் நடைபெற்றது.

இறுதியில் ஷெப்டன் மாலட் எனும் இடத்தைச் சேர்ந்த கரோல் போஹனன் (40 வயது) இந்த சூனியக்காரர் வேலைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அவர் விடுமுறை காலங்களில் சூனியக் காரியாக வலம் வந்து உல்லாசப் பயணிகளை திகிலூட்டவுள்ளார். (ஓ-6)

ஆப்கான் ஜனாதிபதி தேர்தலுக்காக 3,000 கழுதைகள் நியமனம்

ஐக்கிய நாடுகள் சபை

(ஆப்கானிஸ்தான்)

ஆப்கானிஸ்தானில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலின் போது, அந்நாட்டிலுள்ள பின் தங்கிய பிராந்தியங்களில் மில்லியன் கணக்கான வாக்குச் சீட்டுகளை விநியோகிக்க மூவாயிரத்துக்கு மேற்பட்ட கழுதைகள் நியமிக்கப்படவுள்ளதாக ஐக்கிய நாடுகள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள சீரற்ற வீதிகள் காரணமாக, வாகனங்கள் மூலம் வாக்குச் சீட்டுக்களை விநியோகிப்பது சாத்தியமற்று உள்ளதாகவும் இந்நிலையில் அப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆப்கானிஸ்தானிலுள்ள ஐக்கிய நாடுகள் உயர்மட்ட பிரதிநிதி கேய்எயிட் தெரிவித்தார்.

மூவாயிரத்து 500 டிரக் வண்டிகளுக்கு மேலதிகமாக மூவாயிரம் கழுதைகளும் மேற்படி வாக்குச் சீட்டுகள் விநியோகத்தில் பங்கேற்கவுள்ளதாக அவர் கூறினார். (ஓ-6)

சீனாவில் தனிநாடு கோரும் உய்க்குள் முஸ்லிம்கள் 10 ஆயிரம் பேரை ஓரிரவில் காணவில்லை

தலைவர் ரெபியா கதீர் குற்றச்சாட்டு

(டோக்கியோ)

சீனாவில் ஷின் ஜியாங் மாநிலத்தில் உய்க்குர் முஸ்லிம்கள் தனிநாடு கோரி போராடி வருகிறார்கள். கடந்த 5 ஆம் திகதி அவர்களுக்கும் சீனர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலை தொடர்ந்து இராணுவம் உய்க்குர் முஸ்லிம்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுத்தது. அப்போது ஒருநாள் இரவில் 10 ஆயிரம் உய்க்குர் முஸ்லிம்கள் காணாமல் போய்விட்டதாக உய்க்குர் இன முஸ்லிம்கள் தலைவர் ரெபியா கதீர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அவர் ஜப்பான் நாட்டுக்கு சென்று ஆளும் கட்சி தலைவர்களை சந்தித்துப் பேசினார். அப்போது இந்த குற்றச் சாட்டை அவர் அந்த தலைவர்களிடம் வைத்தார்.

மேலும் உய்க்குர் முஸ்லிம்களை அழிக்க சீன அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது என்றும் கூறினார். (ஓ-6)

இரு தலைகளுடன் — பிறந்த பெண் குழந்தை

பிலிப்பைன்ஸில் சம்பவம்



(மணிலா)

பிலிப்பைன்ஸ் மருத்துவமனையில் செவ்வாய்கிழமை இரவு இரு தலைகளுடன் பெண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

மணிலாவிலுள்ள ஜோஸ்ப்பெல்லா ஞாபகார்த்த மருத்துவமனையில் பிறந்த இக் குழந்தையை காப்பாற்ற மருத்துவர்கள் மும்முரமாகப் போராடி வருகின்றனர்.

தற்போது ஆரோக்கியமாகத் தோன்றும் இக்குழந்தை. இரு தலைகளுடன் ஒரு தொகுதி முக்கிய உறுப்புகளை மட்டுமே பங்கீடு செய்துள்ளமை பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அது உயிர் பிழைப்பது சாத்தியமில்லை என மருத்துவமனை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முச்சக்கரவண்டி சாரதியான சல்வாடோர் அர்கண்டாவுக்கும் அவரது மனைவியான சரேறியாவுக்கேம இக்குழந்தை பிறந்துள்ளது.

அவர்களுக்கு ஏற்கனவே 5 குழந்தைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கருத்தரித்தலின் போது உருவான இரட்டைக் குழந்தைகள் வளர்ச்சி நிலையின் போது வேறு பிரியத் தவறியமை காரணமாகவே இரு தலைகளுடன் மேற்படி குழந்தை பிறந்துள்ளது என நம்பப்படுகிறது. (ஓ-6)

கல்வி பொதுத் தராதர உயர் தரப்பரீட்சை -2009 ஆகஸ்ட்

கணக்கீடு 02

By. B. **முகுந்தன்** B.B.A. (Hons)

3 மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள் :
பகுதி I இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு
வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
ஒவ்வொரு விடையும் புதியதொரு தாளில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.ஒவ்வொரு விடையுடனும் பொருத்தமான செய்கைமுறைகள் இணைக்கப்படவேண்டும்.

பகுதி I

A. பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1. எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகுகளில் இருந்து இலாபநட்டமற்ற புள்ளி விற்பனை அலகுகளைக் கழிக்க வருவது
   1. பங்களிப்பு 2. பாதுகாப்பின் எல்லை 3. இலாப நட்டமற்ற புள்ளி
   4. எல்லைச் செலவு 5. மேற்கூறிய எவையுமல்ல
2. ஒரு அலகுக்கான மாறும் செலவு
   1. வெளியீடு மாற்றமடையும் போது மாற்றமடையும்
   2. வெளியீட்டிற்கு ஏற்ப மாறாது காணப்படும்
   3. வெளியீடு அதிகரிக்கும் போது அதிகரிக்கும்
   4. வெளியீடு அதிகரிக்கும் போது குறைவடையும்.
   5. மேற்கூறிய எவையுமல்ல
3. செய்து முடிக்கப்பட்ட வேலை, நிராகரிக்கப்பட்ட வேலை, ஏற்றுக் கொள்ளப்பட்ட வேலை போன்ற நிரல்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அட்டை
   1. நாளாந்த நேர அட்டை 2. வேலைக் கிரய அட்டை
   3. துண்டு வேலைச் சீட்டு 4. வேலைச் சீட்டு
   5. வேலையற்ற நேர அட்டை
4. நேரப் பதிவிற்கு கையாளக் கூடியவை
   1. நேர அட்டை துண்டு வேலைச் சீட்டு
   2. வரவு இடாப்பு, மாணிக்கூட்டு இயந்திரம்
   3. வட்டத்தட்டு முறை நேர அட்டை
   4. வேலைச்சீட்டு,மணிக்கூட்டு இயந்திரம்
   5. துண்டு வேலைச் சீட்டு நேர அட்டை
5. பாதீட்டு ஊழிய மணித்தியாலம் 5000. பாதீட்டு உற்பத்தி மேந்தலை ரூபா 100000. உண்மையான மேற்தலை ரூபா 120000 உண்மையான ஊழிய மணித்தியாலம் 5500 எனின்,
   1. குறைவு உள்ளடக்கம் ரூபா 10000
   2. கூடுதல் உள்ளடக்கம் ரூபா 10000
   3. சுடுதல் உள்ளடக்கம் ரூபா 20000
   4. குறைவு உள்ளடக்கம் ரூபா 20000
   5. மேற்கூறிய எவையுமல்ல
6. கிரயக் கணக்கீட்டின் பிரதான நோக்கம்
   1. இலாபத்தை உச்சப்படுத்தல்
   2. இருப்பு மதிப்பீட்டிற்கு உதவுதல்
   3. தீர்மானம் எடுத்தலுக்கு முகாமை தகவல்களை வழங்குதல்.
   4. விற்பனை விலையைத் தீர்மானித்தல்.
   5. நட்டத்தை குறைத்தல்
7. ஒரு அலகுக்கான நிலையான செலவு குறைவடையும்.
   1. ஒரு அலகுக்கான மாறும் செலவு அதிகரிக்கும் போது
   2. ஒரு அலகுக்கான மாறும் செலவு குறைவடையும் போது
   3. உற்பத்தி அலகுகள் அதிகரிக்கும் போது
   4. உற்பத்தி அலகுகள் குறைவடையும் போது
   5. உற்பத்தி அலகுகள் மாறாத போது
8. மறு கட்டளைத் தொகை என்பது
   1. கொள்வனவு செய்த அலகுகள் பற்றாக்குறையாயின் மீண்டும் கொள்வனவு செய்வது.
   2. இருப்புக்களின் செலவுகளை இழிவு நிலைப்படுத்தக் கூடியதான கட்டளையிட்டு வாங்கும் அளவு.
   3. கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படுவதற்குரிய இருப்பு மட்டம்.
   4. மூலப்பொருள் வேண்டுகைப்பத்திரத்தின் படி கொள்வனவுப் பகுதி வாங்க வேண்டிய பொருள்.
   5. மேற்கூறிய எவையுமல்ல
9. பொருளாதாரத்தில் பணவீக்கம் போது நிறுவனம் கூடுதலான இலாபத்தை உழைக்க வேண்டுமாயின் பின்பற்றப்படும் விலையிடல் முறை
   1. L.I.F.O 2. F.I.F.O 3. எளிய சராசரி
   4. நிறையளித்த சராசரி 5. நியம விலையிடல்
10. ஊழியனுக்கு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நேரத்தைக் காட்டிலும் அவ் ஊழியனுக்கு தேவைப்பட்ட நேரம் குறைவாக காணப்படுமாயின் வித்தியாசம்
    1. அனுமதித்த நேரம் 2. மிகையூதிய மணித்தியாலம்
    3. எடுத்த மணித்தியாலம் 4. நியம மணித்தியாலம்
    5. மேற்கூறிய எவையுமல்ல.
11. நேரடியாக ஒவ்வொரு திணைக்களத்திற்கும் ஏற்பட்ட மேந்தலைகள் தெரியாத போது அந்தந்தத் திணைக்களத்திற்கு பொருத்தமான அடிப்படையில் பிரித்துக் கொடுத்தல்.
    1. ஒதுக்குதல் 2. பகிர்ந்தளித்தல் 3. உள்ளடக்கல்
    4. திரட்டுதல் 5. மேற்கூறிய எவையுமல்ல.
12. உற்பத்திப் பகுதிக்கு வழங்கப்படும் விலையானது சந்தைவிலையை அண்மியதான விலையிடல் முறை
    1. L.I.F.O 2. F.I.F.O 3. எளிய சராசரி
    4. நிறையளித்த சராசரி 5. நியம விலையிடல்
13. எல்லைக்கிரயம் என்பது
    1. மொத்தக்கிரயம் - நேர்க்கிரயம்
    2. மொத்தக்கிரயம் + நேர்க்கிரயம்
    3. மொத்தக்கிரயம் - நிலையானகிரயம்
    4. மொத்தக்கிரயம் + நிலையானகிரயம்
    5. இறுதி அலகொன்றின் மாறுங்கிரயம்
14. கம்பனிவரியானது எந்தக்கணக்கீட்டு நியமத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டது
    1. SLAS 03 2. SLAS 12 3. SLAS 18 4. SLAS 10 5. SLAS 36
15. நிதிக்கூற்றுக்களின் பகுதிகளுள் மிகவும் நம்பகத்தன்மையான தகவல்களை உள்ளடக்கியது
    1. வருமானக் கூற்று 2. ஐந்தொகை 3. உரிமை மாற்றக் கூற்று
    4. குறிப்புக்கள் 5. காசுப்பாய்ச்சல்க் கூற்று
16. 2008ஆம் ஆண்டிற்கான தகவல்கள்
    01.01.2008 இல் இருப்பு ரூபா 40000
    31.12.2008 இல் இருப்பு ரூபா 60000
    விற்பனை ரூபா 300000
    மொத்தலாபம் ரூபா 50000
    கையிருப்பு உடமைக்காலம் யாது?
    1. 5 தடவைகள் 2. 73 நாட்கள் 3. 2.4 தடவைகள்
    4. 60 நாட்கள் 5. மேற்கூறிய எவையுமல்ல
17. தொழிற்படு மூலதனம் ரூபா 150000 நடப்பு விகிதம் 3 : 1 நடைமுறைச் சொத்து யாது?
    1. ரூபா 450000 2. ரூபா 50000 3.ரூபா 225000
    4. ரூபா 75000 5. ரூபா 300000
18. உற்பத்திப் பொருள் தொடர்பான தரவு வருமாறு
    இலாபநட்டமற்ற புள்ளியில் விற்பனை வருமானம் ரூபா 30000
    அலகொன்றின் விற்பனை விலை ரூபா 20
    நிலையான செலவு ரூபா 12000
    அலகொன்றின் மாறுங்கிரயம் யாது?
    1. ரூபா 4 2. ரூபா 12 3. ரூபா 8 4. ரூபா 6 5. ரூபா 18
19. கொள்வனவு செய்யப்பட்ட அலகுகள் வழங்கப்பட்ட அலகுகள் மீதியாக உள்ள அலகுகளுடன் பணப்பெறுமதியும் வெளிப்படுத்தும் பத்திரம்
    1. இராக்கைப்பத்திரம் 2. களஞ்சியப்பேரேடு
    3. வாக்குறுதிச் சீட்டு 4. ஒப்படைப்புப் பத்திரம்
    5. கொள்வனவுக்கட்டளை
20. தெரிவு செய்யப்பட்ட வழங்குனருக்கு கொள்வனவு அதிகாரியினால் அனுப்பப்படும் பத்திரம்
    1. மூலப்பொருள் வேண்டுகைப் பத்திரம் 2. ஒப்படைப்புப் பத்திரம்
    3. கொள்வனவுக் கட்டளை 4. பொருள் வழங்கல் பத்திரம்
    5. பொருள் பெற்றுக் கொள்ளும் பத்திரம்

[20 புள்ளிகள்]

B. **பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.**

1. உள்ளடக்கப்பட்ட மேந்தலையை விட உண்மையான மேற்தலை கூடுதலாக காணப்படுமாயின் .... ஆகும்.
2. சேவைத்திணைக்கள மேந்தலையை உற்பத்தித் திணைக்களங்களுக்கு மீள் பகிர்வு செய்தல் .... எனவும் அழைக்கப்படும்.
3. மேற்தலைச் செலவின் ஒரு பகுதியினை உற்பத்திச் செலவினுள் சேர்த்துக் கொள்ளுதல் .... ஆகும்.
4. மூலதனக்கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளின் காசு உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல்களைக் காட்டும் நடவடிக்கை .... ஆகும்.
5. பராமரிப்புச் செலவு பகிர்வுக்கான மிகப் பொருத்தமான அடிப்படை ....
6. மறுகட்டளையிடும் மட்டம் - (சராசரிப்பாவனை X சராசரி முதன்மைக்காலம்) என்ற சமன்பாட்டினூடாக .... கணிப்பிடப்படும்.
7. மிகை இருப்பு இல்லாமலும் பற்றாக்குறை இருப்பு இல்லாமலும் சீராக இருப்பினளவைப் பேணுதல் .... ஆகும்.
8. பொதுக்கம்பனியானது பங்குலாபம் செலுத்தும்போது .... செய்தல் வேண்டும்
9. முதன்மைக் காலத்திற்கு தேவையான அளவு பொருட்கள் காணப்படுகின்ற போது கட்டளை பிறப்பிக்கப்படுமாயின் அது .... ஆகும்.
10. மொத்தச் செலவின் இழிவு நிலையில் அல்லது கட்டளைச் செலவும் பராமரிப்புச் செலவும் சந்திக்கின்ற புள்ளியில் தீர்மானிக்கப்படுவது .... ஆகும்.

[10 புள்ளிகள்)

C. **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இலாப நட்டமற்ற புள்ளிப் பகுப்பாய்வின் எடுகோள்கள் இரண்டு தருக.
2. SLAS 18 ற்கு அமைய நியாயமான பெறுமதி என்பதனால் விளங்குவது என்ன.
3. SLAS 18 ற்கு அமைய கணக்கீட்டுக் கொள்கை என்பது யாது.
4. உரித்து வழங்கல், உபகார வழங்கல் கம்பனியின் நிதி நிலைமையில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும்.
5. பொருளாதாரக் கட்டளைக் கணியத்தின் எடுகோளினைக் குறிப்பிடுக.
6. கணக்கீட்டு விகிதக் கணிப்பீட்டினால் நிறுவனம் அடையும் நன்மைகள்3 தருக.
7. கம்பனிப் பெயரையும் இலக்கத்தையும் பயன்படுத்தும் 2 சந்தர்ப்பங்களைத் தருக.
8. முதலீட்டுத் தீர்மானமெடுத்தலில் திருப்பி அளித்தல் காலம் (Pay Back Period) என்பதனை வரையறுக்க.
9. இருப்புக் கட்டுப்பாட்டு நுட்பங்கள் எவை?
10. சாதாரண பங்குகளுக்கும் முன்னுரிமைப்பங்குகளுக்கும் இடையிலான இரு வேறுபாடுகளைக் கூறுக.

[10 புள்ளிகள்]

பகுதி II

1. வரையறுத்த CTC கம்பனி 2001.04.01 இல் ஆரம்பிக்கப்பட்டது. 2007.03.31 இல் செயற்பாட்டு இலாபத்தை
பெறுவதற்கு பின்வரும் விடயங்கள் கழித்து இலாபம் பெறப்பட்டது.

பணிப்பாளர் கட்டணம்	ரூபா 10 000
வங்கி வட்டி	ரூபா 4 000
கணக்காய்வு கட்டணம்	ரூபா 10 000
திபெஞ்சர் வட்டி	ரூபா 7 500
பூர்வாங்கச் செலவுகள்	ரூபா 6 000
இடைக் காலபங்கு லாபம் (தேறியது)	ரூபா 18 000

2007.03.31 இல் தொங்கல் கணக்கை ஆராய்ந்தபோது பின்வரும் பிழைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

i.கொடுத்த கழிவு ரூபா 1 500 பெற்றகழிவுக் கணக்கில் இடம் பெற்றது.

ii. கொள்வனவுக் கணக்கில் ரூபா 6 000 கூடுதலாகக் கூட்டப்பட்டது.

2007.03.31 இல் பரீட்சை மீதி பின்வருமாறு,

விபரம்	'000'	விபரம்	"000"
காணி	500	கடன்கொடுநர்	20
கட்டடம்	125	2005/2006 வருமானவரி	40
தளபாடம்	25	செயற்பாட்டு இலாபம்	400
பொறி	100	இலாப நட்டக் கணக்கு	3
மோட்டார்	70	உருவாக்க முன் உழைத்த இலாபம்	30
இருப்புக்கள்	65	வங்கி மேலதகப் பற்று	25
முதலீடு	167	பெற்ற பங்குலாபம்	5
கடன்பெற்றோர்	44	15% திபெஞ்சர்	200
2006/2007 வருமான வரி	20	நிலையான சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	100
சம்பளங்கள்	74	பொது ஒதுக்கு	112
காசு	248	புதிய பங்கு வழங்கீடு	150
சாதாரண பங்கு	250		
		முன்னுரிமைப் பங்கு	100
		தொங்கல் கணக்கு	3
	1 438		1438

மேலதிக தகவல்கள் வருமாறு,

1. இவ்வாண்டில் 10 000 சாதாரண பங்குகள் ஒவ்வொன்றும் ரூபா 15 படி வழங்கப்பட்டது. பெறப்பட்ட காசு காசுக்கணக்கில் வரவு வைத்து புதிய பங்கு வழங்கீட்டு கணக்கில் செலவு வைத்ததைத்தவிர வேறு எப்பதிவும் மேற்கொள்ளப்படவில்லை.
2. காணியைத் தவிர எனைய நிலையான சொத்துக்களுக்கு கொள்விலையில் தேய்மானமிடப்படும். 2001.04.01 இல் பெறப்பட்ட நிலையான சொத்துக்கள் பற்றிய விபரம் வருமாறு,
    கட்டடம் (கொள்விலையில்) ரூபா 175 000
    தளபாடம் ரூபா 75 000
    பொறி ரூபா 250 000
    மோட்டார் ரூபா 180 000
3. கம்பனி இவ்வாண்டுக்கான தேய்மான ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது, இது பற்றிய பதிவுகள் எவையும் செய்யப்படவில்லை.
4. முதலீடுகளின் சந்தைப் பெறுமானம் ரூபா 185 000 ஆகும்
5. சம்பள தொகையில் பணிப்பாளர் சம்பளம் ரூபா 50 000 உம் உள்ளடங்குகிறது.
6. விற்பனை புரள்வுவரித்தண்டம் ரூபா 14 000 செலுத்தப்படவுள்ளது.
7. 2005/2006 ஆண்டிற்கான வருமான வரி ரூபா 35 000 என இனங்கப்பட்டது. 2006/2007 ஆண்டிற்கான
   4வது காலாண்டு வரி ரூபா 10 000 ற்கு ஏற்பாடு செய்க.
8 ரூபா 30 000 ஐப் பொது ஒதுக்கத்துக்கு மாற்றுதல்

வேண்டப்படுவது

பிரசுரிப்பதற்கு பொருத்தமான வடிவில் பின்வருவனவற்றைத் தயாரிக்குக.

1) 2007 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இலாபநட்டக் கணக்கு
2) 2007 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான உரிமை மூலதன மாற்றங்களைக் காட்டும் கூற்று
3) 2007 மார்ச் 31 இல் உள்ளபடியான ஐந்தொகை (பங்கிலாப வரியைப் 10% எனக் கொள்க)

[20 புள்ளிகள்]

2. அ. மாதாந்தக் கேள்வி 1000 அலகுகள் இருப்புவைத்தற் செலவு விற்பனை விலையில் வருடாந்தம் 24% கட்டளைச் செலவு ஒரு அலகிற்கு ரூபா 2பொருட்களுக்கான விலை ரூபா 5.

பின்வருவனவற்றைக் கணிக்க.

1. மறுகட்டளையிடும் தொகை.
2. கட்டளைகளின் எண்ணிக்கை
3. மொத்தக் கட்டளைச் செலவு
4. மொத்தப் பராமரிப்புச் செலவு
5. கட்டளைகளுக்கு பராமரிப்புச் செலவு.

[05 புள்ளிகள்]

ஆ. பின்வரும் தரவுகள் சல்மன் நிறுவனத்தின் ஏடுகளில் இருந்து எடுக்கப்பட்டது.

01.01.2009 ல் இருப்பு 300 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 5
03.01.2009 ல் கொள்வனவு 400 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 6
05.01.2009 ல் வழங்கல் 200 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 15
10.01.2009 ல் கொள்வனவு 200 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 7
13.01.2009 ல் கொள்வனவு 300 அலகுகள் ஒவ்வொன்றும் 8
16.01.2009 ல் வழங்கல் 500 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 15.
20.01.2009 ல் வழங்கல் 300 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 15
23.01.2009 ல் கொள்வனவு 300 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 9
26.01.2009 ல் கொள்வனவு 200 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 10
30.01.2009 ல் வழங்கல் 300 அலகுகள் ஒவ்வொன்றும் ரூபா 15

பின்வருவனவற்றைக் கணிக்க.

1. இறுதியிருப்பின் பெறுமதியை இறுதி உள் முதல் வெளி முறை மூலம் மதிப்பிடுக.
2. 2009 ஜனவரி மாதத்திற்கான வியாபாரக் கணக்கைத் தயாரிக்குக.

[5 புள்ளிகள்]

(மொத்தம் 10 புள்ளிகள்)

3. திலீப் நிறுவனத்தின் 2007, 2008 ஆம் ஆண்டுக்காக ஏட்டிலிருந்து பின்வரும் தரவுகள் பெறப்பட்டன.

	2007		2008	
சொத்துக்கள்				
காசும் சமனானவையும்		200		400
வருமதியாளர்		1 200		1 800
இருப்பு		1 900		800
முதலீடுகள்		2 500		2 500
ஆதனம், பொறி உபகரணம்	1 600		3 800	
(-) பெறுமான தேய்வு ஏற்பாடு	(1 000)	600	(1 400)	2 400
		6 400		7 900
பொறுப்புக்கள்				
சென்மதியாளர்		1 700		200
செல்மதி வட்டி		100		200
செல்மதி வரி		1 000		400
நீண்டகால கடன்		1 000		2 300
		3 800		3 100
பங்கு மூலதனம்		1 250		1 500
பகிரப்படாத இலாபம்		1 350		3 300
		6 400		7 900

2003 ஆண்டுக்குரிய இலாப நட்டக்கணக்கு வருமாறு,

விற்பனை		30 000	
விற்பனைக் கிரயம்		14 000	
மொத்த இலாபம்		16 000	
செலவுகள் : தேய்வு		600	
: வட்டி	360		
: நிர்வாக பங்கீட்டுச் செலவுகள்	6 590		(7 550)
			8 450
ஏனைய வருமானங்கள் - வட்டி			200
வரிக்கு முன் இலாபம்			8 650
வரி			(4 000)
வரிக்கு பின்னய இலாபம்			5 650
பகிரப்படாத இலாபம் கீழ்கொண்டு வந்தது.			1 350
			6 000
பங்குலாபம் செலுத்தியது			(2 700)
			3 300

மேலதிக விபரங்கள்,

1. ஆதனம், பொறி உபகரணம் விற்பனை ரூபா 600, இவற்றின் கிரயம் ரூபா 800, தேய்வு ரூபா 200
2. சொத்துக் கொள்வனவு ரூபா 3 000, இதற்காக நீண்டகால கடன் ரூபா 1 600 பெறப்பட்டது.

நேரில் முறையில் காசுப் பாச்சல் கூற்றினை தயார்செய்க

(10 புள்ளிகள்)

4.JKH கம்பனி 2 உற்பத்தித் திணைக்களங்களையும் 2 சேவைத்திணைக்களத்தையும் கொண்டுள்ளது. அவை வருமாறு.

	உற்பத்தித் திணைக்களம்		சேவைத்திணைக்களம்		மொத்தம்
	A	B	களஞ்சியம்	பராமரிப்பு	
நேரில் மூலப்பொருள்	10000	12000	6000	4000	32000
நேரில் கூலி	5000	4000	1000	1500	11500
நேர் கூலி	4000	3000			7000
வாடகை					5000
தளப்பரப்பு	4000	3000	2000	1000	10000

சேவைத்திணைக்களம்				
களஞ்சியம்	50%	30%		20%
பராமரிப்பு	60%	30%	10%	

	திணைக்களம் A	திணைக்களம் B
பாதீட்டு இயந்திர மணித்தியாலம்	5000	10000
பாதீட்டு ஊழிய மணித்தியாலம்	1000	20000
உண்மையான மேந்தலை ரூபா	20000	ரூபா 18000
உண்மையான இயந்திர மணித்தியாலம்	6000	
உண்மையான ஊழிய மணித்தியாலம்		18000

வேண்டப்படுவது

1. மேந்தலைப் பகிர்வுக் கூற்றினைத் தயாரிக்குக.
2. சேவைத் திணைக்களத்தின் மேந்தலையை பகிர்ந்தளிக்குக.
3. ஒவ்வொரு திணைக்களத்திற்கும் கூடுதல் அல்லது குறைவு உள்ளடக்கத்தினைத் துணிக.
4. பின்வரும் மெய்த் தரவினை அடிப்படையாகக் கொண்டு ஒரு அலகுக்கான உற்பத்திச் செலவினைத் துணிக.
   நேர் மூலப்பொருள் ரூபா 55
   நேர் கூலி ரூபா 35
   இயந்திர மணித்தியாலம் 5
   ஊழிய மணித்தியாலம் 4

[9 புள்ளிகள்] (மொத்தம் 10 புள்ளிகள்)

5. நிறுவனம் இரு செயற்திட்டங்கள் கவனத்தில் கொள்கிறது. இரண்டினதும் ஆரம்ப முதலீடு ரூபா 200000 இரண்டிலும் நிறுவனம் ஒன்றினைத் தெரிவு செய்யத் தீர்மானிக்கின்றது அதன் விபரம் வருமாறு

செயற்திட்டம்	X	Y
எதிர்பார்க்கப்படும் இலாபம்	ரூபா	ரூபா
ஆண்டு 1	80000	30000
ஆண்டு 2	80000	50000
ஆண்டு 3	40000	90000
ஆண்டு 4	20000	120000
4வது வருட முடிவில் மீள் விற்பனைப் பெறுமதி	40000	40000

1. நேர் கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு இலாபம் மதிப்பிடப்பட்டது.
2. மூலதனக் கிரயம் 16%
3. பொருத்தமான கழிவுக் காரணி

ஆண்டு	1	2	3	4	5
கழிவு காரணி	0.862	0.743	0.741	0.552	0.476

வேண்டப்படுவது

1. இரண்டு முதலீட்டிற்கும் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
    1. திருப்பி அளித்தல் காலம்
    2. கணக்கீட்டு வருவாய் வீதம்
    3. தேறிய இன்றை பெறுமதி
2. தேறிய இன்றைய பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு இரு முதலீடுகளிலும் எதை சிபார்சு செய்வீர்.

[10 புள்ளிகள்]

6. A கம்பனி தனி ஒரு பொருளை உற்பத்தி செய்கிறது. இதன் விற்பனை விலை ரூபா 10. இதன் எல்லைச் செலவு ரூபா 6 நிலையான செலவு ஆண்டிற்கு ரூபா 60000. பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

1. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனை அலகு
2. இலாப நட்டமற்ற புள்ளியில் விற்பனைப் பெறுமதி
3. பங்களிப்பு விற்பனை வீதம்
4. ஆண்டிற்கு ரூபா 20000 இலாபம் உழைக்க விற்பனை செய்ய வேண்டிய அலகுகள்
5. ஆண்டிற்கு ரூபா 20000 இலாபம் உழைக்க விற்பனை யாது?
6. எல்லைச் செலவு அலகிற்கு ரூபா 6.50 ற்கு உயர்வுடைய நிலையான செலவும் ஆண்டிற்கு ரூபா 70000 ஆக உயர்வடைகிறது. விற்பனை விலை மாறாத நிலையில் ரூபா 20000 இலாபம் ஆண்டிற்கு உழைக்க வேண்டுமாயின் விற்பனை செய்ய வேண்டிய அலகு யாது?

[10 புள்ளிகள்]

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருப்போர் குறித்து தரகர்களின் உதவியை நாடவேண்டாம்

வவுனியா பிரதேச செயலர் அறிவுறுத்து

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளவர்களை வெளியில் எடுப்பது, அவர்களுக்கான அடையாள அட்டைகளைப் பெறுவது. கிராமசேவகர்களிடம் அவர்களைப் பதிவு செய் வது, அவர்களுக்கான கடவுச் சீட்டைப் பெறுவது போன்ற செயற்பாடுகளில் இடம்பெயர்ந்தவர்களோ அல்லது அவர்களின் உறவினர்களோ தரகர்களின் உதவியை நாடவேண்டாம் என வவுனியா பிரதேச செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தத் தேவைகளுக்காகப் பொதுமக்கள் தரகர்களின் உதவியை நாடியுள்ளமை தொடர்பாக பிரதேச செயலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள மக்களின் தேவைகளுக்காகத் தரகர்கள் கிராம சேவை அதிகாரிகளின் இலச்சினை, கையெழுத்து என்பவற்றைப் போலியாகப் பயன்படுத்தியுள்ளதுடன், பிரதேச செயலாளரின் கையெழுத்து மற்றும் அவருடைய அலுவலக இலச்சினையையும் தரகர்கள் போலியாகப் பயன்படுத்தியுள்ளமை தொடர்பாகத் தகவல்கள் கிடைத்துள்ளதுடன், இது சம்பந்தப் பட்ட கடிதங்களும் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்திருப்பதாகவும் வவுனியா பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

தரகர்களின் செயற்பாடுகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ள பிரதேச செயலாளர், பொதுமக்கள் தமது தேவைகளுக்காக தத்தமது பிரிவு கிராமசேவர்களுடன் தொடர்பு கொள்வதோடு, அவசியமானால் கிழமை நாட்களில் கடமை நேரத்தில் பிரதேச செயலாளர் அல்லது உதவிப் பிரதேச செயலாளரை நாடி நமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும்எனத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்கான இந்தியாவின் உதவிகளை மறந்துவிடவில்லை

மட்டு. திருமலை ரயில்,பஸ் சேவை ஆரம்பவிழாவில் பசில் ராஜபக்ஷ

(கொழும்பு)

இலங்கைக்கு இந்தியா கடந்த காலங்களில் வழங்கிய உதவிகளை நாம் ஒருபோதும் மறந்துவிடவில்லை. நாட்டின் அபிவிருத்திக்கு மட்டுமல்லாது இறைமை மற்றும் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளது. அவற்றை நாம் ஒருபோதும் மறந்துவிடவில்லை என்று ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

மட்டக்களப்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலான ரயில் பஸ் சேவையை ஆரம்பித்து வைத்து அங்கு நடைபெற்ற வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்தியா எமக்குக் கடந்த காலங்களில் வழங்கிய உதவிகளை நாம் ஒரு போதும் மறந்துவிடவில்லை. நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு மட்டுமன்றி இறைமை தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கும் பல்வேறு வழிகளில் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது. இவற்றை ஒரு போதும் நாம் மறந்து விடவில்லை. இந்தியா எமக்கு வழங்கியுள்ள உதவிகள் வரலாற்றுப் புத்தகங்களில் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

கிழக்கு மாகாண மக்களுக்கு ஜனநாயக உரிமை பெற்றுக் கொடுக்கப்பட்டது போல வடக்கு மாகாண மக்களுக்கும் அவ்வுரிமையைப் பெற்றுக்கொடுப்பதற்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு தற்போது சேவைகளையும் செய்துவருகின்றனர். இரு மாகாணங்க்ளிலும் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாது வங்கிச் சேவைகளும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு வகையான அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இவை மாகாண பிரதேச அபிவிருத்திக்கு மட்டுமல்லாது நாட்டின் அபிவிருத்திக்கும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்று தெரிவித்தார். (ஓ-6)

சர்வகட்சிக் குழுவின் தீர்வுத் திட்டம் இவ்வாரம் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கலாம்

பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் அமர்வுகள் 127 தடவைகள் இடம்பெற்றுள்ளன. இதனடிப்படையிலேயே 13 அரசியல் கட்சிகளும் அரசியல் தீர்வு தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன என்று குழுவின் தலைவரும் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பில் அமைச் சர் மேலும் கூறுகையில்,

எமது சர்வகட்சி குழுவின் அமர்வுகள் 127 தடவைகள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் 13 அரசியல் கட்சிகளும் பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளன. ஜனாதிபதியிடம் இவ்வாரம் தீர்வுத்திட்டத்தை ஒப்படைக்கலாம் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்த தீர்வுத் திட்டத்தில் 13அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதுவரை கையொப்பம் இடவில்லை. அதற்கு முன்னர் ஜனாதிபதியிடம் யோசனையை முன்வைத்து அவரின் ஆலோசனையைப் பெற்ற பின்னர் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அதில் கையொப்பம் இடுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதுவே சிறந்தது என்று நானும் கருதுகின்றேன். அதன் பின்னர் ஏற்கனவே சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்காத கட்சிகளின் யோசனைத் திட்டங்களை கோரவுள்ளோம் என்று தெரிவித்தார். (ஓ-6)

திருமலையிலும் கிளிநொச்சியிலும் விசேட பொருளாதார வலயங்கள்

பிரதித்தூதுவர் பி.எம்.அம்சா

இலங்கை அரசாங்கம் இரு விசேட பொருளாதார வலயங்களை திருகோணமலையிலும் கிளிநொச்சியிலும் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சென்னையில் உள்ள இலங்கைக்கான பிரதித் தூதுவர் பி.எம். அம்சா அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் உரை நிகழ்த்தும் போது தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கிளிநொச்சி மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் இரு சிறப்புப் பொருளாதார வலயங்களை அமைப்பதின் மூலம் அங்கு வருகைதரும் முதலீட்டாளர்கள் தங்ளது வர்த்தகர்களை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள பிரதித் தூதுவர் அம்சா கடந்த இருமாதங்களுக்கு முன்னர் பயங்கரவாதத்தை வெற்றி கொண்டு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டதைத் தொடர்ந்து அனுகூலமான இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வவுருதகாவும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

மியன்மார் குழுவினர் 3ஆம் திகதி இலங்கைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கும் மியன்மார் நாட்டிற்கும் இடையில் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்காக மியன்மார் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 3 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் மியன்மாருக்கு விஜயம் மேற் கொண்டிருந்த போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பா்ட்டின் அடிப்படையிலேயே அக்குழுவினர் இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வருகை தரவுள்ளனர்.

அத்துடன் 20 பேர் அடங்கிய மியன்மார் வர்த்தகக் குழுவினரும் அந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ் விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட வர்த்தக முயற்சிகளை மேம்படுத்தல் தொடர்பிலும் புதிய முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தகக் குழுவினர் நுகர்வோர் விவகார முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்களையும் இலங்கை வர்த்தகக் குழுவினரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். வடக்கில் மிகவும் குறைந்த விலையில் வீடுகளை நிர்மாணித்தல் தொடர்பில் இக்குழுவினர் ஆராய்ந்து அதனூடாக தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுக்க விருக்கின்றனர். (ஓ-6)

நல்லூரான் திருவடிக்கு இன்று 5ஆம் திருவிழா

எழிலான நல்லூரா சரணம்

நல்லூரில் அருள்பவனே சரணம்
நற்றமிழாய் எழுந்தவனே சரணம்
புள்ளிமயில் வாகனனே சரணம்
புவனமெல்லாம் காப்பவனே சரணம்
அல்லல்களைத் தீர்ப்பவனே சரணம்
ஆறுமுக வேலவனே சரணம்
எல்லோருக்கும் வரமளிப்பவனே சரணம்
எழிலான நல்லூரா சரணம்

பா.யசோதா , திருநெல்வேலி

இந்திர விழா நடக்குது!

இந்திர விழா நடக்குது
எழில் நல்லைப் பதியில் நடக்குது
மந்திர வேதம் ஒலிக்குது
மன்னவன் ஆட்சி நடக்குது
அந்தி வேளை மலருது
ஆனந்தக் காட்சி தெரியுது
வந்திடும் வேலன் வீதி நிறையுது
வானவர் வாழ்த்து ஒலிக்குது

திருமதி அ.அனுசூயா

வேலவா நீயே துணை

சூரபன்மன் தனை துலைத்தறுத்து மாமயில்மேல்
வீரவேல் கொண்டு விளையாடும் – பேருடனே
சேவற்கொடி யசைய நல்லைப்பதி மீதமரும்
வேலவா நீயே துணை

கவிமணி ச.சிவப்பிரகாசம்

நல்லை நகர் கந்தா

கந்தா கடம்பா கதிர் வேலவனே
வள்ளி மணவாளனே வடிவேல் முருகனே
துள்ளி வரும் மயிலில் துள்ளி ஏறிவாராயோ
கள்ளம் கபடம் அற்ற பக்தர்களின்
உள்ளத்தில் பதித்திடுவாய் உன்
திருப்பாதத்தினை
அள்ளி அள்ளி தந்திடுவாய் உன்– அருளை
இன்பமாய் வாழ்வதற்கு இனிய வழி
காட்டிடுவாய் கதிர் வேல் முருகனே

இணுவையூர் கனகசபாபதி

நல்லூரான் திருவடிக்குத் திருவிழாக் காலம்

அடிமுடி என்றும் கண்ட றியாத அரனினதும்
அடிமுடியில் என்றும் நறுமணம் வீசும் உமையினதும்
அடியடி என்றும் தொடரப் பிறந்த மைந்தனாம்
அடிப்பெருங் கடவுளாகிய நல்லைக் கந்தனாம்

அடிவரை யறையை ஆராய்ந்தால் அவன் வேல்வீரனாம்
அடிபிளைத்து தேவரை அடிமைப் படுத்திய சூரனையும்
அடித்து அனைவரையும் சித்திரவதை செய்த குலத்தையும்
அடியோடு அழித்து அடியாருக்கு அபயமளித்த வீரனாம்

அடிபட்ட சான்றோர் என்றும் புகழும் முருகனாம்
அடியொத்த காலத்திலும் அடியாரைக் கவரும் வேலனாம்
அடியார்கள் ஒன்றுகூடி செய்விக்கின்றார்கள் அபிடேகம்
அடிஞான நல்லூரான் திருவடிக்கு இப்போது திருவிழாக்காலம்

கவிஞர் க.யோகராசா , அரியாலை

ஜெய தீபம் நாம் ஏற்ற

மயிலாசனா மன மகிழ்வோங்க வா
மாதிருவர் துணையாக வா
மங்கள நிறைவோடு வா
அபிலேந்துவா அடியார் மனம்மேவி வா
அருளாள வா
நல்லைப் பதி வீதி வா
புயபலம் ஓங்க வா புகை புறமோடவா
புத்தெழிலாக வா
புதுமை நிறைவாக வா
ஜெயம் மேவ வா செந்தமிழோங்க வா
ஜெய தீபம் நாம் ஏற்ற
ஜோதி வடிவாகி வா

அல்வாயூர் சி.சிவநேசன்

அழகு மயில் வாகனனே
அடியார்க்கு அருள்புரி முருகா!
அசோகா நகை அகம்
இல-111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

முன்னர் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை பின்னர் வரும் உயர் நீதிமன்றம் மாற்றலாமா?

மேன்முறையீடும் / மீளாய்வும்

மேன்முறையீடு என்பது சட்டப்படி ஒரு நபருக்குரியது. கீழ்நிலை நீதிமன்றம் ஒன்று வழங்கிய தீர்ப்பில் அதிருப்தியுறும் ஒரு எதிரி தனக்கு மேன்முறையீடு வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தை கேட்க உரிமையுண்டு.

ஆனால் மீளாய்வு என்பது அப்படிப்பட்டதல்ல. மீளாய்வு என்பது விசேட நிவாரணமாகும்.

அந்த விசேட நிவாரணத்தை பெற தனக்கு உதவி புரியுமாறு எதிரி உயர் நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும். உயர் நீதிமன்றம் அந்த எதிரிக்கு விசேட நிவாரணத்தை பெறக்கூடிய சூழ்நிலை ஒன்று கீழ் நிலை நீதிமன்றத்தின் தீர்ப்பால் ஏற்பட்டுள்ளது என்று கருத வேண்டும்.

எதிரி தனது விண்ணப்பத்தை உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். தனக்கு தீர்ப்பு வழங்கிய நீதிமன்றம் எது? அந்த தீர்ப்பில் உள்ள குறைபாடு என்ன? என்பன தெரிவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் அந்த தீர்ப்பில் சட்ட பிழைகள் உண்டு என்றும் அவை விசாரிக்கப்பட வேண்டுமென்றும் ஒரு சட்டத்தரணி சாட்சிப் பத்திரம் கொடுக்க வேண்டும்.

பின்னர் அதனை உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் காரியாலயத்தில் ஒப்படைக்க வேண்டும்.

மேலே கூறிய நடவடிக்கை முறையை கவனித்தால் அது இன்னுமொரு நீதிமன்றம் விட்ட பிழையை திருத்தவோ உயர் நீதிமன்றத்திற்கு போகலாமே தவிர உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒரு குழுவால் பிழையாக வழங்கப்பட்டு விட்டது. இதனை கூடுதலான நீதிபதிகளைக் கொண்டு விளங்க வேண்டும் என்று கேட்க இடமில்லை என்று கண்டுகொள்ளலாம்.

பிரபுக்கள் சபை தனது தீர்ப்பை பின்னர் தானே மாற்றலாம். இங்கிலாந்தில் எழுதப்பட்ட அரசியல் அமைப்பு இல்லை. நீதிமன்றத்தை மக்கள் மதிக்கின்றனர்.

அரசியல் சாயம் தீர்ப்பில் இருப்பதாக எந்த ஒரு ஆங்கிலேயரும் கூறுவதில்லை. இலங்கையில் இந்த நிலையில்லை. இங்கு எழுதப்பட்ட அரசியலமைப்பு உண்டு.

இந்த யாப்பின் கீழேயே நீதிமன்றங்கள் நியாதிக்கத்தை பெறுகின்றன. நீதியரசர் ஒருவர் தனது சொந்தக் கருத்தை அல்லது உறவை வெளிப்படுத்தியவுடன் அவர் வழங்கும் தீர்ப்பு அந்த கட்சியின் கருத்தாக இருக்கிறது என்று கூறுகின்ற பழக்கம் இலங்கையில் உண்டு.

ஆகவே நீதியரசர்கள் வழங்குகின்ற தீர்ப்பை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்த்து அதனை மீளாய்வு செய்யக் கோரினால் ஒரு போது ஒரு வழக்கிற்கு இறுதி முடிவு இருக்காது. தொடர்ந்தும் தொடர்ந்தும் மேன் முறையீடு கேட்டுக் கொண்டே இருப்பர். நீதித்துறை தீர்ப்பில் நம்பிக்கை வைப்பதற்கு இது உதவியாக அமையாது.

புதிய பிரதம நீதியரசரின் கருத்து

புதிய பிரதம நீதியரசர் அசோக டீ சில்வா ''ராவய'' என்ற சிங்கள வார இதழுக்கு (26.07.2009) பேட்டி ஒன்று அளித்துள்ளார். அந்தப் பேட்டியில் அவர் கூறியுள்ளது என்னவெனில் ''சாதாரண மனிதர்கள் நீதிமன்றத்திற்கு வந்து கேட்பது என்னவெனில் தங்களுக்கு சூரியனை அல்லது சந்திரனை பிடித்து தரும்படியல்ல. அவர்கள் கேட்பது தமக்கு நீதி வழங்கும்படியே.

அதனை நாம் வழங்கினால் மட்டும் போதாது. நீதி வழங்கப்படுவதாகவும் மக்கள் கருத வேண்டும்.

எந்தவொரு நீதித்துறையி லும் குறைகள் இல்லாமல் இல்லை. எங்களது நீதித்துறையில், தெளிவின்மையும் குறை பாடுகளும் உண்டு.

நான்அந்தக் குறைபாடுகளையும் ஏனையவற்றையும் திருத்துவேன்'' என்றார்.

இத்தகைய உன்னத நோக்கத்தோடு அமைந்துள்ள உயர்நீதிமன்ற நீதியரசர்கள் வழங்குகின்ற தீர்ப்பை பின்னர் வருவோர் மீளாய்வு செய்ய இடமளிக்க முடியுமா?

சட்டத்தரணி கே.ஜீ.ஜோன்

அகவே முன்னர் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாத காரணங்களை காட்டி பின்னர் மீளாய்வு செய்யலாம் என்ற அபிப்பிராயத்தை மக்கள் மத்தியில் உண்டாக்கினால் நீதித்துறையின் கௌரவத்தை பாழடித்தவர்களாக மாறுவோம் என்பதில் சந்தேகமில்லை.

(முற்றும்)



அனாலைதீவு பிரதேச வைத்தியசாலையில் நடைபெற்ற நடமாடும் பல் வைத்திய சேவையில் யாழ். பிராந்திய பதில் பல் வைத்திய அதிகாரி டாக்டர் வி.ஆர். டேவிட் யாழ். மத்திய கல்லூரி பற் சிகிச்சையாளரோடு சேர்ந்து சிறுமி ஒருவருக்கு பற்சிகிச்சை அளிப்பதைப் படத்தில் காணலாம்.

வடமாகாண தடகளப் போட்டியில் 4×100 அஞ்சல் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அஞ்சலோட்ட அணியினருடன் யாழ். மாவட்ட விளையாட்டுக்குழு செயலாளர் எம். நடராஜா காணப்படுகின்றார்.

(படம் : கோபி)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகர சபை எல்லைக் குட்பட்ட பொது அமைப்புக்கள் திணைக்களப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் சபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தலைமை தாங்குவதையும், பிரதேச செயலக உதவி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் மற்றும் நகர சபையின் முகாமைத்துவ உதவியாளர் தயாபரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம் : சாவகச்சேரி நிருபர்)

வலிகாமம் கல்வி வலய
முறைசாராக் கல்விப் பிரிவால் நடாத்தப்படும்
பெற்றோர்கள் ளைகளுக்கான
கல்வி விழி வு செயற்றிட்டம்.

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் நடத்தப்பட்டு வரும் பெற்றோர் பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வு செயலமர்வு அண்மையில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை நலன்புரி நிலையத்தில் நடத்தப்பட்டது. இச்செயலமர்வில் வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் உரையாற்றுவதையும், செயற்திட்ட அலுவலர் ந. சண்முகராசா, வாழ்வக நிறுவனத்தலைவர் ஆ. ரவீந்திரன், உடுவில் உதவிப் பிரதேச செயலர் அ. சோதிநாதன், மயிலிட்டி கலைமகள் வித்தியாலய அதிபர் வே. உதய மோகன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

குளம் வற்றி மீன் பிடிக்க காத்திருந்த கொக்கு குடல் வற்றிச் செத்ததாம்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி

கியூ (வரிசை) பண்பாட்டில் 'சதொச' விற்பனை நிலையம்

லங்கா சதொச நிறுவனம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கொழும்பு விலையில் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம் என்ற தகவலால் சதொச விற்பனை நிலையத்தை நாடி மக்கள் ஓடுகின்றனர்.

கொழும்பு விலையில் பொருட்கள் கிடைப்பதென்பது மகிழ்வுக்குரியது. வாழ்க்கைச் செலவைக் குறைக்கவும் அது உதவும்.

இருந்தும் யாழ்.குடாநாட்டு மக்களின் நுகர்வுத் தேவையை யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ஒரு கிளை மூலம் நிவர்த்திக்க முடியாதென்பது தெரிந்த விடயம்.

எனவே சதொச நிறுவனத்தின் கிளைகள் யாழ்.மாவட்டத்தின் பல பாகங்களிலும் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்பது தெளிவான விடயம்.

ஆகவே இது பற்றி காரணகாரியத்துடன் விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் சதொச நிறுவனம் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்ட அடுத்த நாளே யாழ்ப்பாணத்தில் மறந்து– மறைந்துபோன கியூ (வரிசை) பண்பாடு மீண்டும் தலை தூக்கியது.

ஏ–9 பாதை திறக்கப்பட்டு பொருட்கள் தாராளமாக எடுத்து வரப்படும்போது சதொச நிறுவனத்தில் மக்கள் வரிசையில் நின்று பொருள் வாங்கும் தேவை எதற்கு என்ற கேள்விக்கான விடை கண்டறியப்பட வேண்டும்.

அது மட்டுமன்றி எந்தெந்த நிறுவனங்கள் மக்களை வரிசையில் நிறுத்தினவோ அந்தந்த நிறுவனங்கள் இயல்பு நிலையின்போது தோற்றுப்போன துயரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முதல் விமானப் பயண சேவை நடத்திய அமைப்புகள் வரை நீண்டு செல்வதை காண்கின்றோம்.

எனவே சதொச நிறுவனம் வரிசைப் பண்பாட்டில் பொருள் விநியோகம் நடத்துவதை அறவே தவிர்க்க வேண்டும்.

அதற்காக அந்த நிறுவனம் தனது கிளைகளை விரைவாக நிறுவுவது அல்லது அதற்கு மாற்று வழியாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக பொருள் விநியோகத்தை மேற்கொள்வது என்ற நடவடிக்கையைச் செய்ய வேண்டும்.

இதைச் செய்வதற்கு சதொச நிறுவனத்தின் தலைமை தயங்கும்போது,சதொசவுக்கு வருகின்ற பொருட்கள் மொத்த வியாபாரக் கலாசாரத்திற்குள் இழுக்கப்பட்டு, குறித்த சில தனியார் வர்த்தக நிறுவனங்களைச் சென்றடைவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இது போன்ற அருமையான அனுபவத்தை யாழ்ப்பாணத்தில் இயங்கிய –இயங்கும் அமைப்பொன்று மிகத் திறமையாகச் செய்து காட்டியது தெரிந்ததே.

சகல செளபாக்கியமும் தரும் வரலக்ஷ்மி விரதம்

இன்று வரலக்ஷ்மி விரதம்

வரலக்ஷ்மி பூஜைக்குரிய காலம்

சிராவண (ஆடி அல்லது ஆவணி) மாதம் பெளர்ணமிக்கு முன் வரக்கூடிய வெள்ளிக்கிழமையன்று சுமங்கலிப் பெண்கள் வரலக்ஷ்மி விரத பூஜையைச் சிறப்பாகச் செயவார்கள்.

விரதமனுஷ்டிக்கும் சுமங்கலிகள் அன்றைய தினம் கோவிலில் அல்லது வீட்டில் குறிப்பிட்ட இடத்தைத் தூய்மைப் படுத்தி மண்டபத்தில் அழகாகக் கோலமிட்டு நெல்லைப்பரப்பி அதன் மீது ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதன் மீது தங்கம் , வெள்ளி அல்லது செப்புக்குடத்தை ஸ்தாபனம் செய்து அரிசி அல்லது நீரினால் அக் குடத்தை நிரப்பி மாவிலைக் கொத்து, தோங்காய், சந்தனம், குங்குமம், அஷதை ,பட்டு , மாலை, புஸ்பங்கள் என்பவற்றால் அலங்கரித்து அக்கவசத்தில் மேல் மகாலட்சுமியின் பிரதியின்மையையும் காப்பையும் வைத்து பூஜை செய்ய வேண்டும். அன்றைய தினம் பூஜையில் வைத்த நோன்புக் கயிற்றை (காப்பை) வலது கையில் அணிய வேண்டும் .

செய்ய வேண்டிய பூஜைக்கிரமங்கள்

விக்னேஸ்வரப் பூஜை (விநாயகரை வழிபடல்) , பூஜாரம்பம் (பூஜையைத் தொடங்குதல்), பிராணாஜயம் (மூச்சை உள் இழுத்து வெளிவிடல்) , ஸஸ்கற்பம் (கிரிஜை செய்வதாக உறுதியளித்தல்) , விக்னேஸ்வர உத்தாபனம் (விநாயகரை இருப்பிடத்திற்கு அனுப்பி வைத்தல்), கலச பூஜை (நீர்ப்பாத்திரத்தில் காங்காதேவியை புரோசித்தல் கண்டாபூஜை கைமணிக்கு பூஜை செய்து அடித்தல்), தியானமும் ஆவாஹனமும் (கும்பத்தில் மகாலட்சுமியை ஆபாகரித்து எழுந்தருளச் செய்தல்), பிரணாப்பிரதிஸ்டை (உயிரூட்டம் செய்தல்) ,சோடசோப சாரப் பூஜை (16 உபசாரங்களை பூஜையில் செய்தல்) ,அங்க பூஜை (அங்கங்களில் மந்திரபூர்வமாக பூஜை செய்தல்), ஸ்ரீலக் சுமி அஸ்டோத்தரம் அல்லது சிரிசதி அல்லது சகஸ்டநாமம் செய் தல் விசேஷம் உத்தராங்கப்பூஜை (பூஜையின் இறுதியில் செய்யும் உபசாரப் பூஜைகள்). பிரதஷிண நமஸ்காரம் செய்தல் (வலம் வந்து வணங்கு தல்), இராஜஜோபசாரங்கள் (அரச மரியாதைக்குரிய உப சாரங்கள் (அரச மரியாதைக் குரிய உப சாரங்களைச் செய்தல்), தோரக் கிரந்திப் பூஜை (காப்பிலிருந்து ஒன்பது முடிச் சுக்களில் ஒவ்வொன்றையும் புஸ்பம் , அஷதை இவை களி னால் பூஜித்தல்), அக்கிய பிரதாணம் (கையில் நீரை எடுத்து பூ ஜா சமர்ப்பணம் செய் தல்.

உபஸ்நானம் (பூஜைகளில் ஆவாஹனம் செய்த தேவதைகளை இருப்பிடத்திற்கு அனுப்புதல்), சுமங் கலி பூஜை செய்தல் (சுமங்கலிப் பெண்களுக்கு பூஜை செய்து வழிபடல்)

வரலக்ஷ்மி பூஜையின் பலாபலன்கள்

மேற்கூறிய பூஜைக்கிரமங்களுடன் மஹாலக்ஷ்மியை சிரத்தையுடன் வழிபட்டால் வாழ்நாள் முழுவதும் தனம், தான்யம் கல்வி, இளமை ஆரோக்கியம் ஸம்பத்துக்கள் சந்தான விருத்தி சகல மங்களங்களும் அஷ்டலக்ஷ்மி கடாஷமும் தீர்க்க சுமங்கலிப் பேறும் இவ்வரலக்ஷ்மி விரத மகிமையை படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் பரப்புபவர்களுக்கும் வரலக்ஷ்மியின் அருளால் தனதான்ய சம்பத்துக்கள் அனைத்தும் கிடைக்கப் பெறும்.

வரலக்ஷுமி பூஜையின் மகிமை

பார்வதி தேவியே இவ்விரதத்தையனுஷ்டித்து சத்புத்திரஸபத்தைப் பெற்றிருக்கின்றாள். சித்திரதேவி என்ற கணதேவதை இவ்விரதத்தையனுஷ்டித்து சாபம் நீங்கப் பெற்று குஷ்டரோகத்தில் இருந்து விடுபட்டாள். சாருமதி என்ற பெண் இவ்விரதத்தை மேற்கொண்டு சகல செளபாக்கியங்களையும் பெற்றிருக்கிறாள். விக்கிரமாதித்தியன் நந்தனிடமிருந்து ராஜ் ஜயத்தைப் பெற்றதும் மனைவியில் லாத நந்தன் இவ்விரதம் மேற்கொண்டு அழ கிய மனைவியையடைந்ததும் அவள்பிள் ளைப் பேற்றிற்காக இவ்விரதமிருந்து மூவுலகையும் காக்கும் மகனையும் பெற்றாள். என்பதும் இவ் வரலக்ஷ்மி விரத பூஜையின் மகிமையேயாகும்.

மகேஸ்வரக்குருக்கள்
பால கைலாசநாத சர்மா,
(சமஸ்கிருத விரிவுரையாளர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்)

சுதுமலை அம்பாள் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரத பூஜை

எமது அம்பாள் ஆலயத்திலும் கடந்த பதினைந்து வருடங்களாக வரலக்ஷ்மி விரத பூஜை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சென்ற ஆண்டு (2008) வரலக்ஷ்மி பூஜை தினத்தன்று ஆலய தர்மகர்த்தா சபையின் அனுசரணையுடன் வரலக்ஷ்மி விரத பூஜை எனும் சிறிய கைநூலும் தொகுத்து சிறப்பாக வெளியிடப்பட்டது. இம்முறையும் வரலக்ஷ்மி விரதபூஜை தினத் தன்று வரலக்ஷ்மி ஸ்ரீ சக்ரம் என்பன பொறிக்கப்பட்ட பிரதிமை நூல்கட்டவுள்ள அடியார்களுக்கு வழங்கப்படவும் மஹால க்ஷ்மியின் அருளும் கிடைக்கப்பெறவுமுள்ளது. அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளினதும் வரலக்ஷ்மி அம்பிகையினதும் அருட்காடாஷமும் அஷ்டலக்ஷ்மி கிருபையும் சிறந்த நல்ல ரக்ஷயும் எமக்கெல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

தென் மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்வதற்குத் தயார்

ஐ.தே.க. தெரிவிப்பு

தென் மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது. மூன்று மாவட்டங்களிலும் சிறந்த வேட்பாளர்கள் அணிகளைத் தேர்தலில் களமிறக்குவோம் என்று ஐக்கிய தேசிய கட்சியின் காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தென் மாகாண சபை அடுத்த வாரம் கலைக்கப்படும் என்றும் சவாலான தேர்தல் ஒன்றுக்கு எதிர்க்கட்சி தயாராக வேண்டும் என்றும் அமைச்சர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே வஜிர அபேவர்த்தன எம்.பி. மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தென் மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே இருக்கின்றது. தென் மாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சிறந்த முறையில் வேலைத்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

தென் மாகாணத்தின் மூன்று மாவட்டங்களிலும் ஏற்கனவே வேட்பாளர்களை அடையாளப்படுத்தி வைத்துள்ளோம். வேட்புமனு தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட்டதும் வேட்பாளர்களை அறிமுகப்படுத்துவோம். தென் மாகாண சபையில் வெற்றி பெறக்கூடிய வகையில் எமது கட்சி பிரசார நடவடிக்கைகளை மிகவும் பலமான முறையில் மேற்கொள்ளும் என்றார். (ஓ–6)

வெள்ளி நற்சிந்தனை

82

பக்தியின் மொழி தமிழ்

முற்காலங்களில் மனிதன் பிற உயிர்கள் மீது அன்பும் இரக்கமும் கொண்டவனாக வாழும் இயல்புடையவனாக இருந்தான். தன்னைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வாழும் உயிர்களுக்கு ஓர் ஊறு ஏற்பட்டால் ஓடிச் சென்று உதவினான். இறைவன் படைப்பில் எல்லா உயிர்களும் சமமே என்ற எண்ணம் கொண்டிருந்தான். ஏற்றத் தாழ்வு பற்றிய சிந்தனை எதுவும் அவனுக்கிருக்கவில்லை. உணர்வுகளால் ஒளிவு மறைவில்லாத உன்னதமான வாழ்வை நடத்தினான். குறிப்பாகத் தான் வாழும் சூழலில் வதியும் உயிரினங்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்தான்.

இத்தகைய இனிய வாழ்வியலைச் சுந்தரர் தனது பாடலிலே சுட்டிக்காட்டுகிறார். இன்று எம்மிடையே கருணையும் இரக்கமும் குறைவு பட்டிருக்கும் வேளையில் சுந்தரப் பாடல் எம்மை மீள் சிந்தனை வசப்படுத்துகிறது. மலைப் பிரதேசத்தில் வாழும் குறவர்களுடைய வாழ்வியலைச் சுந்தரர் தனது பாடல் மூலமாக எமது கண் முன்னே கொணர்ந்து நிறுத்துகிறார்.

காட்டிலே மகிழ்வான வாழ்வு நடத்திய யானைக் கூட்டம் ஒன்றையொன்று பிரிய நேர்ந்து விட்டது. பெண் யானை ஆண் யானையைப் பிரிந்து தவிக்க வேண்டி நேர்ந்தது. வாழும் சூழலிலே திரிந்து கொண்டிருந்தது. குறவனைக் கண்டு தன் செவியைத் தாழ்த்தியது. அதன் செயற்பாடு குறவனை மனம் இரங்கச் செய்தது. குறவர் வலிய மனம் படைத்தவர்கள் ஆனால் அவர்கள் தொழில் நிலையில் வலிமை இன்றியமையாதது. எனினும் கல்லுக்குள் ஈரம் இருப்பது போலப் பெண் யானையைக் கண்டு அதற்கு ஆவன செய்கின்றனர். இலையால் கல்லை கோலி பிழிந்ததேனை அதனுள் வார்த்து அதற்கு ஊட்டுகிறார்கள் மிக இரக்கத்தோடு செயற்படும் குறவர் வாழும் சீப்பர்பத மலையைச் சுந்தரர் காட்டும் விதம் பக்தியைப் பரப்பும் முயற்சியாக உள்ளது.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

உறவைப் பிரிந்து அல்லற்படுபவரைக் கண்டு மிக இரக்கத்தோடு தொழிற்படும் "மனிதம்" மலைவாழ் குறவரிடம் இருந்தது. எனவே அறிவுள்ள மனிதரிடம் அப்பண்பு செறிவாகவே இருக்க வேண்டும். இறைவனின் எண்குணங்களில் ஒன்றான எல்லா உயிர்களிடமும் அன்பாக இருக்கும் இயல்பு மனிதனுக்கும் இன்றியமையாதது பக்தி நெறியில் அன் பும் தொண்டும் அடிப்படையான பண்பு நலனாகும். சீப் பதமலையில் இறைவன் எழுந்தருளியிருப்பதால் அங்கு ஒரு பண்பான வாழ்வியல் நடக்கின்றது. கோயிற் சூழலில் வாழும் மக்கள் பிறர் துயர் துடைக்கும் கனிவான உள்ளங் கொண் டவராக இருப்பர். துன்புறும் மக்களைக் கண்டால் ஏற்றது செய்யும் தொண்டராயிருப்பர். பக்திவயப்பட்ட சுந்தரர் எல் லோரையும் அந் நெறியில் செல்ல வழி சொல்லியுள்ளார்.

> "ஆனைக்குலம் இரிந்தோடித் தன்பிடி சூழலில் திரியத்
> தானப்பிடி செவிதாழ்த்திட அதற்கு மிக இரங்கி
> மானக்குற அடல் வேடர்கள் இலையாற் கலைகோலித்
> தேனைப் பிழிந்தினிது ஊட்டிடும் சீப்பத மலையே"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

தேசிய இணைய வழி தொலை தூரக்கல்விச்
சேவையின் தொலைதூரக் கல்வி நவீனமயமாக்கல்
திட்டத்தின் கீழான
இணைய வழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி
பட்டப்படிப்பு (வெளிவாரி)

BACHELOR OF BUSINESS MANAGEMENT (EXTERNAL) ONLINE DEGREE PROGRAMME

Under
'Distance Education Modemization Project of National Online Distance Education Scrvice

புதிய அனுமதி -2009

மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி 2009 ஆகஸ்ட் 17ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவாளர் , **30.07.2009**
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சி/2947)

பிரமோஸ் ஏவுகணைச் சோதனை வெற்றி

(ஜெய்சல்மார்)

இந்திய இராணுவம் நேற்று முன்தினம் பிரமோஸ் பிளாக் -2 ரக ஏவுகணை சோதனையை நடத்தியது.

ராஜஸ்தான் மாநிலம்பொக்ரான் பகுதியில் உள்ள நகரும் ஏவு தளத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 9.15 மணிக்கு செலுத்தப்பட்ட இந்த ஏவுகணை 25 கிலோ மீற்றர் தொலைவில் தரையில் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கியதாகவும் சோதனை வெற்றிகரமாக நடந்ததாகவும் இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்தியா-ரஷியா கூட்டு திட்டத்தின் கீழ் இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பு தயாரித்துள்ள பிர மோஸ் ஏவுகணை சோதனை இதற்கு முன்பு கடைசி யாக கடந்த மார்ச் 29 ஆம் திகதி பொக்ரானில் நடத்தப்பட்டது. (ஓ-6)

யாழ். சென்றல் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங் கத்தினால் நடாத்தப்பட்டு வரும் 2008 ஆம் ஆண்டிற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஐம்பது (50) பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் கால் இறுதிப் போட்டியில் யாழ்.சென்றல் அணி பற்றீசியன்ஸ் அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன்ஸ் அணி 30.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 131 ஓட்டங்களை பெற்றது. முகுந்தன் 13, விதுபாலா 12, நிலோஸன் 11, சேர்ச்சில் 23, மிலான்டோ 13, ஓட்டங்களைப்பெற்றனர். சத்யன் 7 பந்து பரிமாற்றங்களில் 16 ஓட்டங்களைக் கொடுத்து 4 இலக்குகளையும் விமலகாந் 6.3 பந்து பரிமாற்றங்களில்27 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் ஜெசிந்தன் 7 பந்து பரிமாற்றங்களில் 15 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

132 ஓட்டங்களைவெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். சென்றல் அணி 37.4 ஓவர்களில் 4 இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களை பெற்றது. சிஸ்ரன் 4 சிக்ஸர் 4 பவுண்டறிகள் உட்பட ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களைப் பெற்று வெற்றிக்கு வழிவகுத்தார். றஜீவ் 20 ,சுதர்ஸன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். முகுந்தன் 7 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளை கைப்பற்றினார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி 02.08.09 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கும் அரை இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியுடன் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ

யங் ஏஷியா தொலைக்காட்சி நிறுவனத்தின்
-புதிய வானொலி நாடகத்தொடர்-

கண்ணகிபுரம்/ கண்ணகிபுர

யங் ஏஷியா தொலைக்காட்சி நிறுவனம் எதிர்வரும் 5ஆம் திகதி தனது புத்தம் புது முயற்சியாக கண்ணகிபுரம் /கண்ணகிபுர என்ற வானொலி நாடகத் தொடரின் ஒலி பரப்பினை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கையின் ஒரே நேரத்தில் கண்ணகிபுரம் என்று தமிழ் மொழியிலும் கண்ணகிபுர என்று சிங்கள மொழியிலும் பொழுதுபோக்கு , குணசித்திரம் மற்றும் போராட்டங்களை பிரதிபலிக்கும் இந்த புத்தமைவுடைய படைப்பினை நாட்டின் வானொலி நேயர்களுக்காக ஒலிபரப்ப உள்ளனர்.

இந்த வானொலி நடாகத் தொடர் வாரத்திற்கு இரு தடவைகள் ஒவ்வொரு புதன் மற்றும் வெள்ளி கிழமைகளில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய மற்றும் வர்த்தக சேவைகளிலும், பிராந்திய சேவைகளிலும் ஒலிபரப் பப்படவிருக் கின்றன. கண்ணகி புரம்/ கண்ண கிபுர என்ற இரு மொழி பாடல் ஒன்றையும் யங் ஏஷியா தொலைக்காட்சி நிறுவனம் தயாரித்து அதனை இந்த நாடகத் தொடர் ஒலி பரப்பாகும் அதே வேளையில் உள்ளூர் வானொலி நிலை யங்களில் ஒலிபரப்புவ தற்காக இறு வெட்டு ஒன்றினை வெளியிட இருக்கின்றது.



கண்ணகிபுரம்/ கண்ணகிபுர என்று இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தை கற்பனையில் உருவாக்கி தயாரிக்கப்பட்டுள்ள இந்த வானொலி தொடரில் கிராமத்து இளைஞர்களும் யுவதிகளும் தங்கள் சமூகத்தின் மேம்பாட்டுக்கான மாற்றங்களை மேற்கொள்வதற்கு எடுக்கும் முயற்சிகளை இந்த நாடகத்தின் கதாபாத்திரங்கள் தத்ரூபமாக சித்தரிக்கின்றன. இதில் போராட்டங்கள் கதை யம்சம், காதல்,முரண்பாடு போன்ற சகல அம்சங்களும் கலந்திருக் கின் றன. இந்த நாடகத் தொடர் பொழுது போக்கு அம்சமாக இருக்கின்றன. அதே வேளையில் இலங்கையின் கிழக்கு பிராந்தியத்தில் வாழும் மக்களின் வாழ்வின் உண்மையான தாற்பரியத்தை வெளிப்படுத்தக் கூடிய வகையில் நேயர்களை சிந்திக்க வைப்பதற்கு ஓர் உந்து சக்தியாகவும் இருக்கும் தற்போதைய நாட்டின் தேசிய நிலைப் பாட்டுக்கு ஏற்புடைய வகையில் இந்த நாடகத் தொடரின் கதையம்சம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சகிப் புத்தன்மை சக வாழ்வு மற்றும் இலங்கையி லுள்ள மக்கள் மற்றும் சமூகங்கள் ஒரு வரை ஒருவர் மதித்து கௌரவிப்பதன் முக்கியத்துவத்தையும் இந் நாடகத் தொடர் எடுத்துக் காட்டுகின்றது.

இவ்ஆண்டு ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்ட நாடகப்பிரதி எழுத்தாளர் போட்டியில் வெற்றி பெற்றவர்களும் யங் ஏஷுயா டெலி விஷன் நிறுவனத்தின் துறைசார் நிபுணர்களும் இணைந்து உருவாக்கப்பட்ட தயாரிப்பு அணியின் மூலமே இந்த நாடகத்தொடரின் கதையம்சம் மற்றும் அதன் அங்கங்கள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. தென்றல் எவ்.எம்மில் பி.ப. 5.45 தொடக்கம் பி.ப.6.00 மணி வரை இந்நாடகத் தொடர் ஒலிபரப்பாகவுள்ளது.

பேருவளை மோதல் சம்பவம்
தொடர்பாக 132 பேருக்கு விளக்க மறியல்

மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 132 பேரைப் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களைத் தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு களுத்துறை மேலதிக நீதவான் சாந்தினி டயஸ் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டதுடன் பள்ளி வாசல் ஒன் றுக்கும் பாரிய சேதம் ஏற்படுத்தப்பட்டது.

கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசேட விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும்

கடந்த 01.07.2009 புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் குல விளக்கு

அமரர்
அருணாசலம் அமிர்தலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் (31.07.2009) இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசியில் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

அ.சிறீதரன்(மகன்)

ஆறுமுகவித்தியாசாலை ஒழுங்கை,
சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம் .

வளர்பிறை பட்டுச்சோலை
சங்கானை

(சி/2946)

நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற நல்லை ஞானசம்பந்தர் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேச செயலக ஓய்வு பெற்ற திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் சி.ரவீந்திரசர்மா தம்பதிகள் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி அணிவகுப்பையும் படங்களில் காணலாம்.

முரளிதரன் அதிரடி ஆட்டம்; இலங்கை அசத்தல் வெற்றி

(தம்புள்ள)

முரளிதரனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் மற்றும் ஒரேஒரு இருபது–20 போட்டி கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது போட்டி நேற்று தம்புள்ள சர்வதேச அரங்கில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்ப ஜோடிகளான ஜெயசூரியா, தரங்கவும் இணைந்து நிதானமான ஆரம்பத்தை வழங்கினர்.

எனினும் சனத்ஜெயசூரியா 19 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 15 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார சிறப்பாகத் துடுப்பெடுத்தாடமறுமுனையில் உப்புல் தரங்க 44 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 17 ஓட்டங்களை மாத்திரமெடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 11.4 ஓவர்களில் 45 ஓட்டங்களை எடுத்து 2 ஆவது விக்கெட்டையுமிழந்தது.

தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார– ஜெயவர்த்தனா ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை சரிவிலிருந்து மீட்டனர்.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 40 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கபுகெதர 8, சமரவீர 10 ஓட்டங்களுடன் வந்தவேகத்திலேயே ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

அடுத்து மத்யூஸ் களமிறங்கி சிறப்பாகத்துடுப்பெடுத்தாட மறுமுனையில் மஹேல ஜெயவர்த்தனா 56 பந்துகளில் (ஒரு பவுண்டரி அடங்கலாக) 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 33.2 ஓவர்களில் 131 ஓட்டங்களை எடுத்து 6 ஆவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து 7ஆவது விக்கெட்டுக்காக இணைந்த மத்யூஸ்–குல சேகர ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணியை கௌரவமான இலக்கை நோக்கி அழைத்துச் சென்றனர்.

இந்த ஜோடி 67 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்தபோது குலசேகர 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் களமிறங்கிய முரளிதரன் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட இலங்கை அணி 46.5 ஓவர்களில் 200 ஓட்டங்களைத் தொட்டது.

இதில் மத்யூஸ் 50 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 43 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து துஷார களமிறங்க மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய முரளிதரன் 15 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் இலங்கை அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 232 ஓட்டங்களை எடுத்தது.

CEMENT
SRI LANKA
PAKISTAN

இதில் துஷார் 9 ஓட்டங்களை யும் மலிங்க 4 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் மொகமெட் அமீர் 3 விக்கெட்டுக்களையும் அப்துல் ரஷாக் 2 விக்கெட்டுக்களையும் உமர்குல், சயிட் அஜ்மல் மற்றும் சகிட் அப்ரிடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 233 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான மலிக் 09, அக்மல் 20, யூசுப் 04, அப்ரிடி 27, யூனிஸ்கான் 12, மிஸ்பா உல் ஹக் 09 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்ற பாகிஸ்தான் அணி 25.5 ஓவர்களில் 95 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 6 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

இந்நிலையில் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி பேராடிய போதும் பாகிஸ்தான் அணி 44.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 196 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் உமர் குல் 21 பந்துகளில் (6 பவுண்டரிகள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் பாவாட் அலாம் 58 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 31 ஓட்டங்களையும் மொகமெட் அமீர் 26 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் அப்துல் ரஷாக் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் திலான் தூஷார 3 விக்கெட்டுக்களையும் குலசேகர, முரளிதரன் ஆகியோர் தலா 2 விக் கெட்டுக்களையும் மலிங்க, ஜெய சூரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த முரளிதரன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

விளையாட்டுச் செய்திகள்
BOLT

இருபது–20 போட்டிக்கு அப்ரிடி அணித்தலைவர்

(லாகூர்)

இலங்கை அணிக்கு எதிரான இருபது–20 போட்டிக்கு பாகிஸ்தான் அணித்தலைவராக அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் ஒரேஒரு இருபது–20 போட்டிகளில் விளையாடிவருகிறது.

எதிர்வரும் 12ஆம் திகதி நடக்க உள்ள இருபது–20 போட்டிக்கு பாகிஸ்தான் அணியின் தலைவராக அப்ரிடி நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகக் கோப்பைக்குப்பின் இருபது–20 போட்டிகளிலிருந்து பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் ஓய்வு பெற்றார். இதன் காரணமாக அப்ரிடிக்கு இந்தவாய்ப்பு கிடைத்துள்ளது.

கடந்த 13 ஆண்டுகளாக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடிவரும் அப்ரிடி முதன் முறையாக பாகிஸ்தான் அணியை வழிநடத் தும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

போர்முலா 1 கார்பந்தயத்தில் மீண்டும் மைக்கெல் ஷூமாக்கர்

(லண்டன்)

போர்முலா 1 கார்பந்தயத்தில் 7 முறை உலக சம்பியன் பட்டம் வென்றவர் ஜேர்மனியின் மைக்கெல் ஷூமாக்கர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற அவர் மீண்டும் போர்முலா 1 போட்டிக்கு திரும்ப முடிபு செய்துள்ளார்.

சமீபத்தில் நடந்த ஹங்கேரி கிராண்ட்பிரிக்சில் பெராரி அணி வீரர் பிரேசிலின் பெலிப் மாசா தலையில் பலத்த காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார். அவருக்கு பதிலாக ஷூமாக்கர் அந்த அணியில் இடம் பெறுகிறார்.

இந்த பருவகாலத்தில் எஞ்சிய 7 போட்டிகளில் அவர் பங்கேற்க உள்ளார். போர்முலா 1 போட்டியில் அடுத்த பந்தயமாக ஐரோப்பியன் கிராண்ட்பிரிக்ஸ் எதிர்வரும் 23ஆம் திகதி நடக்கிறது.

200 மீற்றர் நீச்சலில் பெல்ப்ஸ் புதிய சாதனை

பிரான்ஸில் ரோம் நகரில் நடைபெற்றுவரும் உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டியில் இரண்டு நாட்களுக்குள் 11 உலக சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது இரண்டு ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை வென்றவரும் உலக சாதனைக்கு சொந்தக்காரருமான மைக்கெல் பெல்ப்ஸ் 200 மீற்றர் போட்டியின் இறுதிப் போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளார்.

அவரது புதிய சாதனை 1:51.51 ஆக அமைந்துள்ளது. உலக சம்பியன்ஷிப் நீச்சல் போட்டிகள் நாளை மறுதினம்வரை நடைபெறவுள்ளமை விசேட அம்சமாகும்.

மீண்டும் கிரிக்கெட் சூதாட்டம்?

(கராச்சி)

கிரிக்கெட் சூதாட்டம் மீண்டும் தலை தூக்கியுள்ளது. இலங்கை அணிக்கு எதிரான சமீபத்திய டெஸ்ட் தொடரின் போது இந்திய சூதாட்ட முகவர்கள் தங்களை தொடர்பு கொண்டதாக பாகிஸ்தான் அணியினர் அதிரடியாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி முதலில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. இதில் முதலிரண்டு போட்டிகளில் வெற்றி வாய்ப்பை வீணாக நழுவவிட்ட பாகிஸ்தான் அணி தொடரை 2:0 என இழந்தது.

இந்த தொடரின் போது வீரர்கள் கொழும்பில் உள்ள தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கியுள்ளனர். அப்போது மும்பையை சேர்ந்த சூதாட்ட முகவர்கள் பாகிஸ்தான் வீரர்களை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டுள்ளனர். பின்னர் இரவு விருந்துக்கும் அழைத்துள்ளனர்.

இது பற்றி பாகிஸ்தான் அணியின் முகாமையாளர் ஜாவர் சயீத் கூறுகையில்;

நாங்கள் தங்கியிருந்த ஓட்டலில் மும்பையை சேர்ந்த சூதாட்ட முகவர்கள் இருந்ததாக சந்தேக படுகிறோம். இவர்கள் தான் வீரர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தொந்தரவு கொடுத்தனர்.

ஒரே தளத்தில் இருந்ததால் பிரச்சினை ஏற்பட்டது. இதுபற்றி ஹோட்டல் நிர்வாகத்திடம் முறைப்படி புகார் அளித்தோம். பின்னர் வீரர்கள் ஹோட்டலின் வேறுதளத்துக்கு மாற்றப்பட்டனர் என்றார்.

கொழும்பு தாஜ் ஹோட்டல் கிரிக்கெட் சூதாட்டத்துக்கு பேர் பெற்றது. பாகிஸ்தான் அணி 1994ஆம் ஆண்டு இலங்கை சென்ற போது இதே ஹோட்டலில்தான் சூதாட்டம் நடந்ததாக சர்ச்சை ஏற்பட்டது. இது தொடர்பான விசாரணையில் சலிம் மலிக்கிக்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டது. தற்போது மீண்டும் சூதாட்டப் பிரச்சினை எழுந்துள்ளதால் கிரிக் கெட் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஒருநாள் போட்டி தரவரிசையில் தோனி தொடர்ந்து முதலிடம்



(டுபாய்)

சர்வதேச ஒருநாள் போட்டிக்கான ஐ.சி.சி. துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் இந்திய அணித்தலைவர் தோனி முதலிடத்தில் நீடிக்கிறார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஒருநாள் போட்டிக்கான புதிய தரவரிசைப் பட்டியலை நேற்று முன் தினம் வெளியிட்டுள்ளது.

இதில் இந்திய அணித்தலைவர் தோனி (828) புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். மற்றொரு இந்திய வீரர் யுவராஜ் (784) இரண்டாவது இடத்தில் உள்ளார். மூன்றாவது இடத்தை அவுஸ்திரேலியாவின் மைக்கெல் ஹசி (767) பிடித்துள்ளார்.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் (732) ஏழாவது இடத்திலுள்ளார். சச்சின், காம்பீர், முறையே 15 மற்றும் 16ஆவது இடங்களை பெற்றுள்ளனர்.

சிறந்த டெஸ்ட் அணிகள் பட்டியலில் அவுஸ்திரேலியா (128), தென்னாபிரிக்க (119), இந்தியா (117), முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன.

சர்வதேச ஒருநாள் அணிகள் தரவரிசையில் முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்கா (126), அவுஸ்திரேலியா (122), இந்தியா (121) உள்ளன.

நல்லூர்க் கந்தன்
கொடிய வினைகள் நீக்கி
யாவருக்கும் நல்லருள்
புரிய வேண்டுகின்றோம்.

உத்தரவாதத்துடன் தங்க
நகைகளைப் பெற்றிட
நாடுங்கள்
ஆசைப்பிள்ளை அன் சன்
நகைமாடம்
இல. 10, பஸ் நிலையம்,
சங்கானை.
(C-2928)

சிற்றிலிங் சி.டி.எம்.ஏ பிரதேச நிலையங்களில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ரெலிகொம்மின் சிற்றிலிங் சி.டி.எம்.ஏ தொலைபேசியை சாவகச்சேரி நகரப் பகுதியில் சிறிலங்கா ரெலிகொம் பரிவர்தனை கோபுரம் அமைந்துள்ள வளாகத்தில் இன்றும் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய முகாமையாளர் என்.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

இதேவேளை சுன்னாகம் மற்றும் மாலுசந்தியில் ரெலிக்கொம் பரிவர்த்தனை நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் நாளை சனிக்கிழமை சிற்றிலிங் சி.டி.எம்.ஏ. தொலைபேசியை பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் கூறினார். (நு)

போர் உச்சக்கட்டத்தில் இருந்த போது...

அல்ல. ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னரும் இலங்கையிலிருந்து றோ செயற்பட்டுக் கொண்டிருந்துள்ளது.

அவர்கள் விடுதலைப் புலிகளுடனும் தொடர்ந்து தொடர்புகளை வைத்திருந்தார்கள். இதனால்தான் இந்தியா தனது கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும் என நாம் கேட்கின்றோம் எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இந்தியாதான் பயிற்சியளித்தது. அவர்கள் தமது தவறை உணர்ந்து கொண்ட பின்னர்தான் தமது அணுகுமுறையை மாற்றிக் கொண்டார்கள். அவர்கள் இப்போதும் பிரிவினைவாத சக்திகளால் முட்டாள்களாக்கப்படுகின்றார்கள் என்பதுதான் ஆபத்தானது எனவும் குறிப்பிட்ட ஜே.வி.பி. தலைவர், 1980-களில் சிறிலங்காவில் தமது நலன்களை இந்தியா பெற்றுக்கொண்டது எனவும் சுட்டிக்காட்டினார்.

இப்போது இங்கு ஆயிரத்து 500 இந்தியர்கள் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக வந்துள்ளார்கள். இந்தியர்கள் எதற்காக கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு வர வேண்டும். எமது நாட்டவர்களால் இதனைச் செய்ய முடியும். இவை உதவிகள் அல்ல. மரணக் கயிறுகள். இந்தியாவுடன் பகைமையை வளர்க்க நாம் விரும்பவில்லை. அதனால் தான் நாம் சொல்கின்றோம்- இந்தியா ஒருநாள் பாதிக்கப்படும்.

இலங்கையின் பிரச்சினை அவர்களைப் பாதிக்கும் என்பதால் இது அவர்களுக்கு நாம் விடுக்கும் நட்பு ரீதியான எச்சரிக்கையாகும். இவ்வாறு சோமவன்ச தனது பேட்டியில் முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கின்றார். (ச-5)

தேசிய மட்ட விளையாட்...

மட்டப் போட்டிகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முதலாம்கட்டம் செப்ரெம்பர் மாதம் 6,7 மற்றும் 8ஆம் திகதிகளிலும் 2ஆம் கட்டம் செப்ரெம்பர் 12,13 மற்றும் 14ஆம் திகதிகளிலும் 3ஆம் கட்டம் செப்ரெம்பர் 23ஆம் திகதி முதல்27ஆம் திகதிவரையும் நடைபெறும்.

முதல் இரண்டு கட்டங்களும் பெரு விளையாட்டுக்களாகவும் மூன்றாம் கட்டம் மெய்வல்லுநர் விளையாட்டுக்களாகவும் நடைபெறும். இதற்குரிய புதிய சுற்று நிருபங்கள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண உடற்பயிற்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். சத்தியபாலன் அறிவித்துள்ளார்.

சுற்று நிருபத்துடன் முதல் 2 கட்டப் போட்டிகளுக்கான நேர அட்டவணையும்அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ச-5)

யாழ்.குடாநாட்டுப்...

திட்டத்தின் ஏனைய வீடுகளில் மக்களை குடியமர்த்துதல், கோவிலாக் கண்டி, தனங்கிளப்பு சாவகச்சேரி வீதி திறப்பு, கொடிகாமம் -பருத்தித்துறை வீதியில் உள்ள பருத்தித்துறை வீதியைத் திறத்தல், சாவகச்சேரி நகர சபை மைதானத்தையும் இந்து மயானத்தையும் திறத்தல், குடத்தனை பகுதிக்கான அனுமதி, நாகர்கோவில் பகுதியில் மீள்குடியேற்றம், அரியாலை கிழக்கு பகுதியில் மீள்குடியேற்றம் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் இன்னும் சில தினங்களில் இப்பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகளை எட்டுவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

கணனி மயப்...

வீடுகளுக்கு வந்தால், அவர்கள் குறித்து பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும். இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புக்காக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் எதிர்காலத்தில் மீளக்குடியேற்றப்படும் அனைவருக்கும் இவ்வாறான அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும் பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர். (ச-5)

சரணடைந்த...

இக்கருத்தரங்கில் அமைச்சர் மகிந்த சமரசிங்க, சட்டமா அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். இதன்போது விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக பி.பி.சியின் சந்தேசியவுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட சட்டமா அதிபர், எல்லோருக்கும் பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்பது குறித்து பேசவில்லை. தனிப்பட்ட முறையில் சிலருக்கு மன்னிப்பு வழங்குவது குறித்து மட்டுமே கருத்து வெளியிட்டார்.

அவர்களை தேசிய மைய நீரோட்டத்தில் இணைத்து பொதுவாழ்வுக்கு கொண்டுவருவதற்கான மாற்றத்தை ஏற்படுத்தும் நீதி குறித்தும் அவர் கருத்து வெளியிட்டார். இது தொடர்பில் விரைவில் ஒரு முடிபு எடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

அரச முகாம்களில் விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் 10 ஆயிரம் பேர் வரை இருக்கிறார்கள். அவர்களில் உயர்மட்டப் போராளிகள் யாரும் இல்லை. அப்படி இருப்பவர்களில் பல ஆண்டுகளாக அந்த அமைப்பிலிருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் சிறார் போராளிகள்.

அதேபோன்று நிர்ப்பந்திக்கப்பட்டு படையில் சேர்க்கப்பட்ட முதியவர்களும் இருக்கிறார்கள். எனவே இந்தப் போராளிகளை பொதுவாழ்வில் இணைக்கும் வகையில் அவர்களுக்கான தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

வவுனியாவிலிருந்து...

கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதனாலேயே இந்
எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு வவுனியாவிலிருந்து வாரத்
10 லொறிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க உ
தாக அரச அதிபர் சார்ள்ஸ் தெரிவித்தார். இத் திட்டம்
மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியிடம்
பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நல்லூர் கந்
மகோற்
வாழ்த்
அழகுக்கு அழகு
வைர நகைகளைப்
சிறந்த ஸ்த
ஆசைப்பிள்ளை
நகைமா
இல. 10, பஸ் நி
சங்கான

கூரியர் சேவை
இன்று முதல் கனடா , பிரான்ஸ்
லண்டன், சுவிஸ்
நாடுகளுக்கு 1 Kg கட்டணம்
600/= மட்டுமே.
Speed Express மூலம்
48 மணித்தியாலங்களில்
ஆவணங்கள் மற்றும் பொதிகளை
ஒப்படைக்கும் வசதி
ARRUL GLOBAL EXPRESS
T.P : 021 222 6113
Email : arrulgex@gmail.com
இல. 01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.

நியூ சிற்றி ரேடர்ஸ்

சகலவிதமான I.C., ரான்ஸ்சிஸ்டர், கொன்டென்சர்கள்,வீடியோ கெட், பிளைபெக் ரான்ஸ்போமர்,பெல்ட்,ஸ்பீக்கர் ,பவல்,வூபர்ஸ் ,மல்டிமீற்றர் மற்றும் இலத்திரனியல் உதிரிப்பாகங்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளவும் ,சகல விதமான ரேடியோ கசற் ரெக்கோடர், TV, கார் ரேடியோ, டிஸ் TV,ரிசிவர் CD, DVD பிளேயர்கள், சார்சலைற், கிறைன்டர்,ரைஸ் குக்கர், அயன் மற்றும் எலக்ரோனிக், எலக்ரிக்கல் பொருட்களை சிறந்த உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

T.P:- 021 222 3226
நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
(C-2938)

(இந்த ஸ்தாபனம் ஸ்ரான்லி வீதி, K.K.S. வீதிச் சந்தியில் இருந்து K.K.S. வீதியில் சத்திரச்சந்திக்குப் பக்கமாக 6 ஆவது கடை)

மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் (V.K.K)

(முன்னாள் பிரபல வர்த்தகரும்,
முன்னாள் உரிமையாளர்
யாழ்.ஆஸ்பத்திரி வீதி குணரத்தினம்
ஸ்ரோஸ், வட்டுக்கோட்டை
ஸ்ரீ முருகன் அரிசி ஆலை)

கொக்குவில் மேற்கு கேணியடியை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல வர்த்தகர் வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் 30.07.2009 நேற்று வியாழக்கிழமை கொழும்பில் காலமானார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-2951)

ஸ்ரீ அம்மா பகவான் சரண

குமார சச்சிதா
தியான பூ

நல்லூர் கந்தசுவாமி உற்சவத்தை முன்னிட்டு நல்லு
சனசமூக நிலையத்தில் தினமும் மாலை 5.30 மணி
6.30 மணிவரை குமார சச்சிதானந்த தியான பூஜை
வருகின்றது.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் ஒவ்வொரு சனிக்
நடைபெற்று வந்த சற்சங்கம் தற்காலிகமாக நல்லூ
சனசமூக நிலையத்தில் நடைபெற்று வருகிறது. மீண்டு
22.08.2009 சனிக்கிழமை தொடக்கம் வழமைபோல்
ஆரம்ப பாடசாலையில் நடைபெறும் என்பதனை பக்
அறியத் தருகின்றோம்.

ஸ்ரீ அம்மா பகவான் மஹா தீட்சைக்கு செல்ல வி
கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- ஸ்ரீ மூர்த்தி படங்களும், ஸ்ரீ அம்மா பகவா
நூலுடனும் பெற்றுக் கொள்ளலாம்.

T.P.:-021 222 2935

ஏகத்துவ நிலையம்
ஸ்ரீ கல்கி ஆன்மீக மை
யாழ்.தலைமை அலுவ
மணியர்பதி லேன்,
கொக்குவில் மேற்கு ,
(C-2948)

YOUR FUTURE
ACCA
IN FINANCE AND ACCOUN
Association of Charted Certified Accou
- கணக்கியலிலும், நிதித்துறையிலும் ஐக்கிய இராச்சிய
உள்ளூர், சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகுதி
வழங்குகின்றது.
- க.பொ.த.(உ/த) இரண்டு பாட தகுதிகள் or 21 வயதிற்கு
இணைந்து கொள்ளலாம்.
- பட்டதாரிகளுக்கு முழுமையான பாட விலக்களிப்புக
செல்வதற்கான விசா ஒழுங்குகள்.
- புதிய மாணவர்களுக்கான பதிவுகள் சனி, ஞாயிறு தி
நிறுவனத்தில் நடைபெறுகின்றது.
- British Council இன் அனுமதியுடன் யாழ். நகரில்

மேலதிக விபரங்களிற்கு:- N.Jeyabalasinga
இணைப்பாளர்

Jaffna Technical Institut
இல.45, மணிக்கூட்டு வீதி, யாழ்
E.mail:- accajaffna@
(C-2950)

போலிகள் எச்சரிக்

போலியானது

ஆகாசவாணி செய்திகள்
வாசிப்பவர் வரதராஜன்
யாழ்.நகரில்:
1.பொன்னான மேனியும்
2.பொலிவான கூந்தலையும் தந்து
3.சகல ரோக நிவாரணியாகத் திகழும்

சித்தாரா பொன்னாங்காணித் தைலத்தில் போலிகள்
கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. போலிகளின் நடமாட்டத்தை தடுக்க இன்றி
பாட்டிலின் மேல் மூடி கண்ணைக் கவரும் வர்ண மூடியாக அச்சி
டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை பொறிக்கப்பட்டு விற்பனை செ
போலிகளைக் களைவதற்கு வேலியாக அமைவது வர்ணத்தில்
பொறிக்கப்பட்ட மூடிகளே. பிளேன் மூடித் தைலம் இனி உங்
வேண்டாம். ஆகவே சித்தாரா பொன்னாங்காணித் தைலம் வாங்கு
மூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரை குறியீடு
பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரி பார்த்து வாங்கு

குறிப்பு:-போலிகளின் நடமாட்டம் வடமராட்சிப் பகுதியில் அதி
வடமராட்சிமக்கள் இதைக்கருத்தில்கொண்டு கூடிய கவனம் எடுக்கவும்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:6382)AR/PR/N0.:228
(C-2895)

யாழ்.மாவட்ட ஏக
சிவா நறுமண
இல.288, ஆஸ்பத்திரி
தொ.பே.:021
(குறிப்பு: சத்திரச்சந்தி

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.07.2009இல் அச்சிட